விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 வைகாசி 26 சனிக்கிழமை (09.06.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 172

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/- மட்டுமே

## போர்க்குற்றங்களை விசாரணை செய்யும்
# சர்வதேச நீதிமன்றத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்
## இலங்கையிடம் ஐ.நா வலியுறுத்து



(ஜெனிவா) போர்க்குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் சர்வதேச போர்க்குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்றுக் கொள்ளுமாறு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைகளுக்காக சர்வதேச போர்க்குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்றுக்கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சர் திலக் 23

## கொழும்பு தாமரை கோபுரத்திலிருந்து
# தவறிக் கீழே விழுந்த கிளிநொச்சி இளைஞன் பலி

(கொழும்பு)

கொழும்பு தாமரைக் கோபுரத்திலிருந்து தவறி கீழே வீழ்ந்து கிளிநொச்சியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் 24

## இறந்த குழந்தை உயிர்த்ததா?
# இறுதி சடங்கு நடந்த போது சங்குவேலியில் நேற்றுப் பரபரப்பு!



(யாழ்ப்பாணம்) உயிரிழந்து 23

## 6பேர் கொண்ட வாள்வெட்டுக்குழு
# மானிப்பாயில் வீடொன்றுக்குள் புகுந்து நேற்று பகல் அட்டூழியம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சம்மந்தப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையாக உள்ள வீடொன்றுக்குள் புகுந்த வாள்வெட்டுக் கும்பல், முச்சக்கர வண்டி மற்றும் வீட்டு கண்ணாடி யன்னல்களை அடித்து சேதப்படுத்தி அட்டூழியத்தில் ஈடுபட்டுத் 24

# மே-18 நினைவேந்தலை நடத்த முதலமைச்சரால் சிறப்புகுழு அமைப்பு
## அங்கத்துவம் பெற விரும்புபவர்கள் விண்ணப்பங்கள் கோரலாம்

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை 2019ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் முன்னெடுத்துச் செல்ல சிறப்புக் குழுவொன்றை நியமிக்க தீர்மானித்துள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இந்தக் குழுவில் அங்கத்துவம் பெற விரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்களை அவர் கோரியுள்ளார்.

இதுதொடர்பில் வடக்கு 23

# நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப அரசு தொடர்ந்து பயணிக்கும்
## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



(கொழும்பு)

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் பணிகளில் தமது அரசாங்கம் தொடர்ந்தும் முன்னோக்கி பயணிக்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சமாதானம் மற்றும் 23

## எதிர்வரும் திங்கள் முதல்
# மண்ணெண்ணெய் விலை குறைவடையும்

(கொழும்பு)

மண்ணெண்ணெய் விலை எதிர்வரும் தினங்களிற்குள் குறைவடையும் என கடற்றொழில், நீரியல் வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் திலிப் வெதஆராச்சி தெரிவித்துள்ளார்.

மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் காரணமாக 24

# எதிர்காலச் சந்ததிக்கு கரிசனை காட்டுங்கள்
## வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

இந்த மண்ணுக்கும் எதிர்கால சந்ததிக்கும் நாம் விட்டுச் செல்லக் கூடியவை எப்படியாக அமைய வேண்டும் என்பதில் கரிசனை காட்டுங்கள் என வடக்கு 23

# ஈழத்தமிழர்களுக்கு நீதி வேண்டி சர்வதேச வழக்கறிஞர்கள் மாநாடு
## இன்று சென்னையில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஈழ தமிழர்களுக்கு நீதி வேண்டி சர்வதேச வழக்கறிஞர்கள் மாநாடு இன்றைய தினம் இந்தியாவில் ஆரம்பமாகின்றது. இந்த மாநாட்டுக்காக யாழ்ப்பாணம் மற்றும் சர்வதேச நாடுகளில் இருந்தும் வழக்கறிஞர்கள் இந்தியாவுக்கு செல்கின்றனர். சென்னை 7 தியாகராய நகர். ஜி.என். செட்டி சாலையில் அமைந்துள்ள தியாகராய அரங்கத்தில் இந்த மாநாடு இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இந்த மாநாட்டுக்கு சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி து. அரிபரந்தாமன் தலைமை தாங்கவுள்ளதோடு. வரவேற்புரையினை சட்டத்தரணி 24

# இனங்களுக்கு இடையிலான அமைதியில் முன்னேற்றம் அவசியம்
## இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில், மதங்கள், இனங்களுக்கு எதிரான வெறுப்பூட்டும் பேச்சுகள் மற்றும் இனங்களுக்கு இடையிலான அமைதி போன்ற விடயங்களில் முன்னேற்றம் அவசியம் என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸில் கடந்த 5ஆம் திகதி நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றியம்- இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் மூன்றாவது செயற்குழு கூட்டத்தின்போது இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் அமைக்கப்பட்டமை, தகவல் அறியும் சட்டத்தை 23

# திக்கம் வடிசாலையை சர்வதேச தரத்தில் மாற்ற
## ஒப்பந்தம் கைச்சாத்து

(யாழ்ப்பாணம்)

திக்கம் வடிசாலையை சர்வதேச தரத்திலான வடிசாலையாக மாற்றுவதற்கான ஒப்பந்தம் 23

## கூட்டமைப்பின் முகத்தில்
# ஜனாதிபதி உதைத்து விட்டார் - சிறீதரன்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஆட்சியை அமைக்க உதவிய ஏணியை உதறித்தள்ளியது மட்டுமல்லாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முகத்தில் 23

# யாழ். பல்கலைக்கழகத்தின் 33-வது பொதுப்பட்டமளிப்பு விழா



## அமைதியான நாடுகளில்
# இலங்கை முன்னேற்றம்

(கொழும்பு)

உலகில் அமைதியான நாடுகள் பட்டியலில், 2008-ம் ஆண்டில் இருந்தே முதலிடம் பிடித்து வரும் ஐஸ்லாந்து இந்தாண்டும் முதலிடம் பெற்று அசத்தி உள்ளது.

72ஆவது இடத்தில் இருந்த இலங்கை 5 இடங்கள் 23



# சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகர் தேவஸ்தானம்

நாளை (10.06.2018) ஈசுர விநாயகரின் கொடியேற்றத் திருவிழா

நேரம்:முற்பகல் 11 மணியளவில்

சோழியூரான் பிறைசூடிக்குரு

(4433)

## கல்யாண் அடைவு கடை

கல்யாண் நகை மாடம்
No-65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
பதிவு இல:A007879

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2018ஆம் ஆண்டு 14.02. 2018 இற்கும், 03.03.2018 இற்கும் உட்பட்ட திகதிகளில் வைத்த அடைவு நகைகள் யாவற்றையும் 2018 ஆம் ஆண்டு ஆனி மாதம் 10 ஆம் திகதி (10.06.2018)இற்கு முன்னர் மீட்கவும், மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும், புதுப்பிக்கத்த வறின் 10.06.2018ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**0777545768, 0774495605**

உரிமையாளர்
T.Rahuna

(4435)

## கல்யாண் அடைவு கடை மற்றும் கல்யாண் நகை மாடம்

கல்யாண் நகை மாடம்
No-65, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
பதிவு இல:A007879

அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு, வாடிக்கையாளர்களின் சேவை கருதி,சட்டபூர்வமாக அங்கீகாரம் பெற்ற எமது கல்யாண் அடைவு கடைகளில் இருந்து, நீங்கள் வங்கியில் அடைவு வைத்த உங்கள் தங்க நகைகளை மீட்க முடியாத சந்தர்ப்பங்களில், அதை நாமே மீட்டு அதன் பெறுமதிக்கு ஏற்றவாறு அதிக பெறுமதிக்கு அடைவு வைத்து உங்கள் மீதி பணத்தை பெற்றுக்கொள்ள முடியும். அல்லது ஏலத்தில் போக இருக்கும் உங்கள் தங்க நகைகளை நாமே மீட்டெடுத்து அதற்குரிய பெறுமதிக்கு ஏற்றவாறு உங்களது மீதிப்பணத்தை பெற்றுக்கொள்ள முடியும். -உரிமையாளர்

**0777545768, 0761181708, 0774495605**

(4435)

### விற்பனைக்கு

யாழ் நக்கா றோட்டில் 3 பரப்பு காணியில் மேல்மாடி வீடு வீட்டுத் தள பாடங்களுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
**0764734160**

(4432)

## அறிவித்தல்

கமக்கார அமைப்புக்களால் பிடிக்கப்பட்டு உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட R.T குறியுடைய செங்காரி நிற பசு,7109 1197 0208 காதுதோடு குறியுடைய சிவப்பு நிற பசு மற்றும் பு.க குறியுள்ள மாவெள்ளை நிற பசு என்பவற்றின் உரிமையாளர்கள் 07 நாட்களுக்குள் தகுந்த ஆதாரங்களுடன் பிடிகூலி, கட்டாகாலியாக விடப்படல் பணம் மற்றும் பராமரிப்பு பணம் போன்றவற்றை செலுத்தி பெற்றுகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:0212061907
நிறைவேற்று செயலாளர்
கமநல சேவை குழு, உடையார்கட்டு.

(4431)

## யா/கொக்குவில் இந்துக்கல்லூரியின் உயர்தர மாணவர்களின் பெற்றோர்களிற்கான கலந்துரையாடல்

யா/கொக்குவில் இந்துக்கல்லூரியின் உயர்தரத்தில் கல்வி பயிலும் 2019,2020 கல்வியாண்டிற்குரிய அனைத்து துறை மாணவர்களதும் பெற்றோர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று 10/06/2018 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.அனைத்து பெற்றோர்களும் தவறாது கலந்து கொள்ளவும்.

-அதிபர்

(க-2858)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு:27-02-1999
உதிர்வு:11-05-2018

## அமரர் சிறிமோகன் கபில்ராஜ் (கபில்குட்டி)

கடந்த 11.05.2018 அன்று இறைபதமடைந்த சிறிமோகன் கபில்ராஜ் அவர்களின் மரணச் செய்தி கேட்டு வெளிநாடுகளிலும் உள்நாட்டிலிருந்தும் முகநூல், தொலைபேசி, குறுந்தகவலிலும் துண்டுப்பிரசுரம், பதாகைவாயிலாகவும், மலர்வளையங்கள், மலர்மாலையில் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வழங்கியோருக்கும் மேலும் எமது மகனின் மரணச்சடங்கில் கலந்து ஆறுதல் அளித்த அனைத்து உள்ளங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த வெள்ளிக்கிழமை கீரிமலை புனிததீர்த்தக்கரையில் நடைபெற்றது. நாளை 10.06.2018 (ஞாயிற்றுக்கிழமை) மு.ப 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மா சாந்தி பிரார்த்தனைகளிலும் கலந்து கொண்டு பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்


இல.555, ஆனந்தபுரம் கிழக்கு, கிளிநொச்சி.
0771470537, 0771603252

தகவல்:தந்தை
சிறிமோகன் (தயா)

# 9 ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் கந்தையா சாமி


*(K.S.அம்பாள் மினிபஸ் உரிமையாளர்)*



ஆண்டுகள் ஒன்பது
ஓடி மறைந்தது அப்பா
உம் நினைவுகள்
எம் நெஞ்சில் நீங்காது நிலைத்து விட்டது
பாசமான உம் குரல்
எம் காதுகளில்
ஒலித்துக் கொண்டிருக்க
பரவசமடைகின்றோம்
தூய அன்பின் அடையாளமே
தேவைகளை நிறைவேற்றிய தெய்வமே
பாரில் நாம் வாழ்வதற்கு
வாழ்வைக் கற்றுத் தந்த ஆசிரியனே
தேம்பி நிதம் உம் நினைவில்
தேகம் குலுங்குகின்றோம்
வாழ்வில் எமக்கிருக்கும் ஒரே ஆசை
மீண்டும் நீங்கள் எமக்கு
அப்பாவாய் வந்துதிக்க வேண்டும்
வேண்டும் வேண்டும் என்று
வேண்டுகின்றோம் இறைவனிடம்
வருவீரோ எம் அன்பு அப்பாவே!

மலர்வு
**01.11.1934**

உதிர்வு
**09.06.2009**



என்றும் உங்கள்
நினைவுடன் வாழும்
- குடும்பத்தினர்

1/5 பலாலி வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(4406)

# பொதுக்கூட்டம்

**யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கம்**

எமது சங்கத்தின் 57வது வருடாந்த பொதுக்கூட்டம் 10.06.2018 ஞாயிற்றுக்கிழமை போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

| | | |
|---|---|---|
| செ.பேரின்பநாதன் | தி.பஞ்சலிங்கநாதன் | சி.பாக்கியலிங்கம் |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் (4434) |

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# மரண அறிவித்தல்



திருமதி
## வடிவாம்பிகை தவராசா

ஓய்வுபெற்ற பெண் பரிசாரகர்
(பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை-மந்திகை)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12*07*1960 | 08*06*2018 |

பருத்தித்துறை ஹாட்லி விடுதி வீதியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி வடிவாம்பிகை தவராசா அவர்கள் நேற்று (08.06.2018) வெள்ளிக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும் R.T பிரணவன், T. ஜனனி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆறுமுகம், தெய்வானை, புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2018) சனிக்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-2860)

ஹாட்லி விடுதி வீதி,
புலோலி மத்தி, பருத்தித்துறை

தகவல்:- குடும்பத்தினர்
தொ.பே:- 077 228 3147

# 1ம் ஆண்டு நினைவலையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 . 01 . 1952 | 22 . 05 . 2017 |

எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

## அமரர் மகேசு தங்கரட்ணம்

ஆண்டொன்று ஆனதென்று அறிவு எமக்கு கூறுகிறது
உண்மைதானா இதுவென்று எம் உள்ளுணர்வு மறுக்கிறது
கண்மூடித்திறப்பதற்குள் எல்லாம் கனவு போல்தான் தெரிகிறது
கனவாகி விடாதா என்று எம் நனவு மனம் ஏங்குகிறது
தாயே உம் இழப்பு நம்மையெல்லாம் உருக்குலைய வைத்ததம்மா
அன்பு கொண்ட உம் வதனம் என்றும் எம்மோடு இருப்பது போல்
உணர்கின்றோம் அன்பால் என்றும்! எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
நீங்காது அம்மா உங்கள் நினைவு எம் நெஞ்சோடு...


கடந்த 22.05.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் ஒளி விளக்கு அமரர் மகேசு தங்கரட்ணம் அவர்களின் 1ம் ஆண்டு ஆத்ம சாந்திப்பிரார்த்தனை (திவசம்) இன்று 09.06.2018 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 11.30 மணியளவில் நடைபெறும். எனவே அந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தும்பளை,
பருத்தித்துறை. (சி-2857)

-குடும்பத்தினர்-
T.P.No:- 077 175 0834

# மரண அறிவித்தல்



## பொன்னையா யோகராசா

07.06.2018 வியாழக்கிழமை அன்று எமது குடும்ப தெய்வம் அகால மரணமடைந்துள்ளார்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1961*01*17 | 2018*06*07 |

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சகுந்தலா தம்பதியரின் அன்பு மகனும் கௌரிதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நல்லையா - சரஸ்வதியின் அன்பு மருமகனும் சந்திரகலா (சுவிஸ்லாந்து), கவிராஜ் (அவுஸ்திரேலியா), நிஷாந்தராஜ் (அனு புடைவையகம் - புதுக்குடியிருப்பு), கிர்ஷிகா, காலஞ்சென்ற டிஷாந்தராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமலாம்பிகை அமரர் லலிதாம்பிகை, இந்திராணி, ரேணுகா, கார்த்திகேசு, விக்னராஜா, ரெட்ணராஜா, பத்மநாதன், திலகவதி, சிறிகந்தராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அமரர் தாமோதரம்பிள்ளை, அமரர் சின்னராசா, கந்தநாதன், தியாகராசா கமலா, ரேணுகா, சகுந்தலா, கௌரி, வனஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுதாகரன் (சுவிஸ்லாந்து), நிர்மலா (கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் - கிளிநொச்சி), ஆகியோரின் அன்பு மாமனாரும் எழில்நிலா, எழில்இசை, எழில்விழி, எழில்நிலவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் சிவலிங்கராசா, சகுந்தலாதேவி, கமலாதேவி, விமலாதேவி, தவமணிதேவி, அமரர் பரமலிங்கம், பரமகுரு, குலவீரசிங்கம், அமரர் மாலதி, அமரர் மோகன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை திருகோணமலை 8ஆம் வட்டாரம் ஆத்திமோட்டை சாம்பல்தீவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லடக்கத்துக்காக சாம்பல்தீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

8ம் வட்டாரம்,
ஆத்திமோட்டை,
சாம்பல்தீவு, திருகோணமலை.

(C-2856)

தகவல்:-
குடும்பத்தினர்

## தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களை வெளியேற்றக்கோரி

# யாழில் நேற்று மறியல் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் வாடி அமைத்து தங்கியுள்ள தென்னிலங்கையைச் சேர்ந்த கடலட்டை பிடிப்பவர்களை உடனடியாக வெளியேற்றுமாறு கோரி யாழ்ப்பாணம் பண்ணையில் உள்ள கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் நிர்வாக செயற்பாட்டை முடக்கி நேற்றுக் காலை 7.30 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை மறியல் போராட்டம் இடம்பெற்றது.

வடமராட்சியில்சட்ட விரோதமான முறையில் வாடி அமைத்து தங்கியுள்ள தென்னிலங்கையைச் சேர்ந்த கடலட்டை பிடிப்பவர்களால் அப்பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன், சுகாதாரம் சம்பந்தமான, சமூக, பிரச்சினைகள் ஏற்படுவதனால் அவர்களை உடனடியாக வெளியேற்றுமாறு அப்பகுதி கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்த நிலையில் மருதங்கேணி பிரதேச செயலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் அண்மையில் நடந்த கலந்துரையாடலின் போது மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நீரியல் வளத் திணைக்களத்தினர் அவர்களை வெளியேற்றாது விட்டால் உங்களுடைய யாழ் அலுவலகத்தின் செயற்பாட்டை முடக்கி போராட வேண்டி வரும் என்ற முன்னறிவிப்பு வழுங்குவது என்றும் மேலும் கடற்றொழில் அமைச்சருடன் இது தொடர்பில் பேசுவது என்றும் மருதங்கேணி பிர தேச செயலகத்தில் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்துவது என்றும் அதுவும் சரிவராத இடத்து யாழ்ப்பாணத்தில் உள்ள நீரியல் வளத் திணைக்களத்தை முடக்கி மறியல் போராட்டம் செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

எதற்கும் ஆக்கபூர்வ மான பதில் கிடைக்காததால் நேற்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள நீரியல் வளத் திணைக்களத்தின் நிர்வாக செயற்பாட்டை முடக்கி மறியல் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.இதில் யாழ்.மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன்,மாகாண சபை யின் உறுப்பினர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், கடற்றொழிலாளர்கள் ,பொது மக்கள் ஆகியோர் கடற்றொ ழில் நீரியல்வளத் திணைக் களத்தின் வாசல் கதவினை பூட்டி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். உள்ளே செல்ல முடியாது வெளியில் நின்ற நீரியல் வளத்திணைக்கள த்தினர் போராட்டக்காரர்க ளுடன் பேச்சு நடத்தினர்.

இதில் மூன்று நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

மூன்று நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படாது விட்டால் மீண்டும் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தை முடக்கும் வகையில் மறியலில் ஈடுபடுவது என தீர்மானிக்கப்பட்டது.

இதனையடுத்து முற்பகல் 11.30 மணியளவில் மறியல் போராட்டம் நிறைவுக்கு வந்தது. (இ-60)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.சி.கௌரிதரன்



எமது பாடசாலையின் ஆசிரியர் திரு.சி.கௌரிதரன் அவர்கள் நேற்று (08.06.2018) யாழ். பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி M.A. (சைவசித்தாந்தம்) பட்டம் பெற்றதை முன்னிட்டு அவரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

ஆசிரிய நண்பர்கள்

யா/கீரிமலை நகுலேஸ்வர ம.வி.. காங்கேசன்துறை.

(A-2855)


## வடமாகாண பெண்கள் வலுவூட்டல் கொள்கை வகுப்பாக்க செயலமர்வு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அனுசரணையில்"வடமாகாண பெண்கள் வலுவூட்டல் பயிற்சிப் பட்டறையும் கொள்கை வகுப்பாக்க செயலமர்வும்" நேற்று யாழ்.பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக பெண்கள் இன்றும் பலவகையான சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார பிரச்சி னைகளுக்கு முகம்கொடுத்து வருவதோடு மிக மோசமான வகையில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எனவேஇவர்களின்வாழ்வை மேம்படுத்துவதற்காக நிரந்தரமான ஒரு திட்டமிடலை தயாரித்து அதை வட மாகாண அமைச்சின் ஊடாக செயற்படுத்துவதற்கும் ஏனையவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று நடைமுறைப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களின் சமூக, பொருளாதார அரசியல் மற்றும் கலாசார நிலைமைகளை மேம்படுத்துவதற்கான மாகாண திட்டமிடலில் நேற்று முதற் கட்டமாக இந்தச் செயலமர்வில் இடம்பெற்றது.

இதில் பாதிக்கப்பட்ட பெண்களின் பிரதிநிதிகளின் அனுபவப்பகிர்வு இடம்பெற்றதுடன் பெண்களின் வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான கொள்கை வகுத்தல் வடக்கு மாகாண மகளிர் அமைச்சின் செயலாளர் ரூபினி வரதலிங் கத்தால் அறிமுகம் செய்யப் பட்டது.

பின்னர் மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் தலைவிகள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், நிபுணர்கள், வடக்கு மகளிர் அமைச்சின் அதிகாரிகள், திணைக்கள தலைவர்களின் பங்களிப்புடன் தற்கால நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடி பெண்கள் முன்வைக்கின்ற தீர்வுகளை மையப்படுத்தி திட்டம் தயாரிக்கப்பட்டது. குறித்த திட்டத்தின் இறுதி அறிக்கை தயாரிப்பதற்கு மேல்மட்ட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹேமன் குமார, மகளிர் விவகார இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார், பேராசிரியர் வி.ரி. சிவநாதன் ஆகியோர் கலந்து கொண்டு விசேட உரைகளை ஆற்றியிருந்தனர். (இ-9)

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கக்கோரும் சட்டத்தை ஆராய்கிறது சு.க.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்காக மக்கள் விடுதலை முன் னணி கொண்டு வந்துள்ள 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை ஆராய் வது என ஸ்ரீலங்கா சுதந் திரக்கட்சியின் மத்திய செய ற்குழு நேற்று முன்தினம் தீர்மானித்துள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில்அவ ரது உத்தியோகபூர்வ இல்லத் தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள் ளது.

அதற்காக குழு ஒன்றை நியமிக்கவும் முடிவு செய் யப்பட்டுள்ளது. 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் குறித்து செயற்குழுக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளதுடன் அதனை எதிர்க்க வேண்டும் என பெரும்பாலானோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மறுசீர மைப்பு வேலைத்திட்டங் களை இந்த மாதம் முதல் ஆரம்பிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், கற்பனை மிகுதியான நாள், பெரியோர் சந்திப்புண்டு.

**மேடம்:** விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**இடபம்:** தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்திதரும்.

**மிதுனம்:** மன நிறைவு தரும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்:** உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவமொன்று இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பிரயாண பயமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| சந் | | சூரி | சுக் |
| | இராசி பலன் கிரகநிலை | | புத. ராகு |
| செவ். கேது | சந்திராஷ்டமம் உத்தரம், அத்தம் மாலை 4.16 மணிக்கு மேட-சந் | | |
| சனி | | குரு | |

**09.06.2018**

வைகாசி 26, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு

தசமி முற்பகல் 9.14 மணிவரை

ரேவதி முன்னிரவு 8.03 மணிவரை

சுபநேரம் 2.52-4.22 மணிவரை

இராகுகாலம் 8.52-10.22 மணிவரை

வளவன்

**தனுசு:** நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாகச் செயற்படுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, அனுகூலமான தகவல்கள் வந்து சேரலாம், விருந்தினர்களின் வருகையுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**துலாம்:** கடன் பாக்கிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், காரிய அனுகூலமுண்டு.


# யாழ்.பல்கலையின் 33 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா




















யாழ்.பல்கலைக்கழகத்தின் 33 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி நேற்றுக் காலை 8.30 மணியளவில் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தலைமையில் ஆரம்பமானது. இதன் போது சகல பீடங்களையும் சேர்ந்த ஆயிரத்து 706 பட்டதாரிகள் பட்டம் பெற்றதுடன், முதன் முறையாக 31 பேர் பொறியியல் விஞ்ஞானமாணி பட்டம் பெற்று பொறியியலாளர்களாக வெளியேறியமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:- உ.சாளின், பொ.சோபிகா)



# தேசிய பாதுகாப்பு போர்வையில் தொடரும் நில ஆக்கிரமிப்பை உடன்நிறுத்த வேண்டும்

## ஜனாதிபதியிடம் சாள்ஸ் எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

வடக்கில் இடம்பெற்ற யுத்தமானது அரசியல் இலக்கினைக் கொண்டதாகும் ஆகவே யுத்தத்தைக் காரணம் காட்டி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் வடக்கில் இடம்பெறும் நில ஆக்கிரப்பு குறித்தும் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி தலையிட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தில் சைட்டம் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான சட்டமூல திருத்த விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கில் இடம்பெற்ற யுத்தமானது அரசியல் காரணிகளை அடிப்படையாக கொண்ட யுத்தமாகும், இந்த யுத்தம் அரசியல் யுத்தமாகவே கருதப்படுகின்றது. இதில் எமது தரப்பினர் ஆயுதம் ஏந்திப் போராடியதும் ஒரு தீர்வினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற காரணத்தை அடிப்படியாக வைத்தேயாகும்.

இப்போது யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையிலும் எமக்கு அரசியல் தீர்வு ஒன்று அவசியமாகும். அதேபோல் அரசியல் கைதின் பெயரில் இன்றும் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்களை விடுவிப்பதாக ஜனாதிபதி பல்வேறு சந்தர்ப்பங்களில் வாக்குறுதி வழங்கினார். ஆனால் இன்றுவரை அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. ஒருசில அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். அதனை நாம் மறுக்கவில்லை. எனினும் அவர்கள் சாதாரண காரணிகளின் பெயரில் கைதுசெய்யப்பட்டவர்கள். அவர்களை விடுவித்துள்ளனர்.

மேலும் சிலர் பணத்தை வாரி இறைத்து சட்டத்தரணிகளின் உதவியில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எனினும் சாதாரண மக்கள் அரசியல் கைதியாக கைது செய்யப்பட்டனர்.

இதுவரை காலமாக ஜனாதிபதி ஒரே ஒரு கைதியை மட்டுமே விடுதலை செய்துள்ளார். தன்னை கொலை செய்ய வந்தவரை தான் பொதுமன்னிப்பின் பெயரில் விடுதலை செய்வதாக கூறினார். ஆனால் ஆனந்த சுதாகரன் விவகாரத்தில் ஜனாதிபதியின் மௌனம் மோசமானது.

ஆனந்த சுதாகரனின் பிள்ளைகளை சந்தித்து அடுத்த புதுவருடத்தின் போது உங்கள் தந்தை உங்களுடன் இருப்பார் என வாக்குறுதி வழங்கினார்.

ஆனால் புதுவருடம் சில மாதங்களாகியும் அவரை விடுதலை செய்யவில்லை. இந்நிலையில் எதிர்வரும் 18ஆம் திகதி ஜனாதிபதி கிளிநொச்சிக்கு விஜயம் செய்கின்றார். ஆகவே ஆனந்த சுதாகரனை விடுதலை செய்து விட்டு அவரது பிள்ளைகளுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டு, ஏனைய அரசியல் கைதிகளை விடுவித்து அதன் மூலமாக எமது மக்களுக்கு கொடுத்த வாக் குறுதிகளை நிறைவேற்றி விட்டு கிளிநொச்சிக்கு வருவதே சிறந்ததாகும். ஆகவே இந்த கோரிக்கையை நான் தாழ்மையாக ஜனாதிபதிக்கு முன் வைக்கின்றேன். மேலும் தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் எமது இடங்களில் இராணுவம் பாரிய ஆக்கிரமிப்பைசெய்து வருகின்றது. சுற்றுலா விடுதி, உணவகங்கள், தேநீர் கடைகள் என இராணுவம்வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கி வடக்கில் பாரிய சுற்றுலா தளங்களை அமைத்து வருகின்றது. தேசிய பாதுகாப்புக்கு தேவை என்ற பெயரில் எமது மக்களின் நிலங்களை அபகரித்து வருகின்றனர். மன்னார் தாழ்வுபாடு பகுதியில் புதிய கடற்படை முகாம் அமைத்து வருகினறனர்.

இதனால் மீனவர்களின் பகுதிகளை அபகரித்து வருகின்றது. இது யுத்தம் முடிவுக்கு வந்தபோது அபகரித்த இடம் அல்ல, கடந்த ஆண்டு அபகரித்த இடமாகும். ஆகவே தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் இவர்கள் எமது மக்களின் நிலங்களை அபகரித்து வருகின்றனர்.

2009 ஆம்ஆண்டுதேவைப்படாத இடம் எவ்வாறு 2017 ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்புக்காக தேவைப்படும் என்ற கேள்வி எம்மத்தியில் எழுகின்றது. இவர்கள் விடுதிகளை அமைப்பது குறித்து நாம் முரண்படவில்லை. ஆனால் எமது மக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் எமது மீனவர்கள் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

இந்த நடவடிக்கைகளை கட்டுப்படுத்த ஜனாதிபதியோ உரிய அமைச்சர்களோ முயற்சிக்கவில்லை. வடக்கில் இன்றும் இராணுவ ஆக்கிரமிப்புமட்டுமே உள்ளது. இராணுவம் செய்வதை எவரிடமும் கேட்க முடியாதுள்ளது.

அமைச்சர்கள் எவரும் இராணுவ நடவடிக்கைகளில் தலையிடத் தயாராக இல்லை. நாமும் நல்லிணக்கத்தை விரும்பியே செயற்பட்டு வருகின்றோம். தேசிய நல்லிணக்கம் ஒன்றினை உருவாக்காது இந்த நாட்டினை கட்டியெழுப்ப முடியாது. ஆகவே இந்த விடயங்களில் ஜனாதிபதி கூடிய கவனம்செலுத்த வேண்டியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி
## மண்டான் சந்தைக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள கடைகள் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2018

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளினை உள்ளூராட்சித் திணைக்களத்தின் 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக ஒரே முறையில் செலுத்தக்கூடிய ஆகக் கூடிய கேள்வித் தொகையினை இச் சபைக்கு செலுத்துபவர்களுக்கு ஆடி மாதம் தொடக்கம் வாடகைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றது.

**1.கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித்திகதி :- 22/06/2018**
**2.கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி :- 25/06/2018 காலை 10.00மணி வரை**
**3.கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 25/06/2018 காலை 10.30 மணி.**

4.கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தபால் உறையானது அரக்கு முத்திரையிடப்படல் வேண்டும். இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் கடை இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு உரிய காலத்திற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமாகவோ சேர்க்கப்படல் வேண்டும்.

5.கேள்விப் படிவத்தினை தலைமை அலுவலகத்தில் தேசிய அடையாள அட்டையை காண்பித்து உரிய படிவக் கட்டணம், மீளளிக்கப்படும் வைப்புப் பணம் என்பவற்றைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

6.எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

7.விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 05 வருடங்களுக்கு ஒரு முறை வாடகைப்பணம் மீளாய்வு செய்யப்படும். இம் மாற்றத்திற்கேற்ப வாடகைக் கட்டணம் மாற்றம் அடையும்.

8.ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகரக் கேள்விக்காரர் தமது கேள்வித் தொகைக்கு மேலதிகமாக 15 சதவீதம் பெறுமதி சேர்வரியாகவும் (VAT), 02 சதவீதம் தேசத்தை கட்டியெழுப்புதல் வரியாகவும் (NBT) வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

9.மாதாந்த வாடகைப் பணத்தை அடுத்து வரும் மாதம் 10 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப்பணமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களிற்கு வாடகைப் பணங்களைச் செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் மறு அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.

10.கடந்த காலங்களில் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்பட்டோர் அல்லது இச் சபைக்கு குத்தகையாக, வாடகையாக, வரியாக நிலுவையில் உள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவராவார்.

11.குத்தகைக்கு பெற்ற கடையின் மின்சார இணைப்புக் கட்டணங்கள் மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும்.

மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**கேள்வி அட்டவணை**

| கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBT வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் (VAT,NBT வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (VAT,NBT வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | 144000.00 | 1500.00 | 1,000.00 | 600.00 |
| 02 | 144000.00 | 1500.00 | 1,000.00 | 600.00 |
| 03 | 144000.00 | 1500.00 | 1,000.00 | 600.00 |

க.த.ஐங்கரன்,
தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

(F-2854)


## வாகனம் விற்பனைக்கு

- டாட்டா LG xxxx ரிப்பர் 3கியூப். 2008 உற்பத்தி
- டாட்டா விஞ்ஞர் (Winger) NB xxx 14 சீற் வான் இரட்டை A/C 2011 உற்பத்தி
- குபோட்டா இருசில்லு உழவு இயந்திரம் பெட்டியுடன்.

தொடர்புகளுக்கு:
077 315 1500

(C-2853)



## துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூசணி அம்பாள்

வெள்ளவத்தை பெர்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் இன்று சனிக்கிழமை தொடக்கம் திங்கட்கிழமை வரை 09/06/2018 இல் இருந்து 11/06/2018 வரை (சனி, ஞாயிறு, திங்கள்) ஆகிய திகதிகளில் ஞான வைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2ஆம் ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் அருள்வாக்கு கூறுவார். அடியவர்கள் அனைவரும் வருகை தந்து அருளாசியை பெற்றுக்கொள்ளவும்.

பூசை நேரம்: முற்பகல் 10.30-12.30 மணி வரை
மாலை 5.30-6.30 மணி வரை

குறிப்பு: கலாசார உடையுடன் வருகை தரவும். (ஞாயிற்றுக்கிழமை அன்னதானம் வழங்கப்படும்).

தொடர்பு: 021 221 9127, 077 801 2226

(3927)



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 1ஆம் பாதம்
கி.பா: 42 உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L HNDலண்டன்
எதிர்பார்ப்பு: இந்தியா வந்து திருமணம் செய்வார்
தொ.இ: B/8637

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 20 செவ்12இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BA அரச தொழில்
தொ.இ: B/8638

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்:உத்திரட்டாதி2ஆம்பாதம்
கி.பா: செவ் 1 இல் உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L சொந்தத்தொழில்
தொ.இ: B/8639

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரம் 4 ஆம் பாதம்
கி.பா: 46 செவ் 7 இல்
தகைமை/தொழில்:BA அரச தொழில்
தொ.இ: B/8640

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சித்திரை 1ஆம் பாதம்
கி.பா: 24 உயரம்: 160cm
தகைமை/தொழில்:BA அரச தொழில்
தொ.இ: G/8679

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 73 செவ் 8இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Software Eng. பொறியியலாளர் தனியார் தொழில்
தொ.இ: G/8680

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: சூரிசெவ் 6 இல் உயரம்: 5'
தகைமை/தொழில்:கனடா PRBSC MSC Epidemiologist Health promoter
தொ.இ: G/8683

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்3ஆம்பாதம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BSC அரச தொழில்
தொ.இ: G/8684

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா [illegible] அறவிடப்படும்.

# திண்மக் கழிவகற்றல் நிலையம் புனரமைப்பு



(கண்டாவளை)

பளை திண்மக்கழிவகற்றல் நிலையம் புனரமைப்பு பணிகள் அறத்திநகர் பகுதியில் பச்சிலைப்பள்ளி பிர தேச சபையின் தவிசாளர் சு.சுரேனின் நடவடிக்கையையடுத்து ஆரம்பமானது.

பச்சிலைப்பள்ளி பிரதேச மக்களின் தொடர்ச்சியான கோரிக்கைக்கு அமைவாகவே பிரதேச சபை நிதியில் இருந்து 1.5 மில்லியன் ரூபா செலவில் திண்மக் கழிவகற்றல் நிலையம் புனரமைப்பு பணிகள் இடம்பெற்றுள்ளன.

சுற்று மதில் அமைக்கவும் தவிசாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (2-315)

# பிரமோற்சவ நிகழ்வு

(பூநகரி)

பூநகரி முழங்காவில் பிரதேசத்தில் அமைந்துள்ள அருள்மிகு செல்வயோக சித்தி விநாயகர் தேவஸ்தான பிரமோற்சவ நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெற்று எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 20 ஆம் திகதி புதன் கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2-84)

# வாடியடிநகர் சந்தைக்கே வியாபார நடவடிக்கை மாற்றம்

## பூநகரி பிரதேசசபை தவிசாளர்

(பூநகரி)

பூநகரி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பொதுச் சந்தை தற்போது வாடியடி நகர் பகுதியிலும் முன்னர் சந்தை இயங்கிய பகுதியிலும் வியாபார நடவடிக்கைகள் நடைபெற்று வருவதால் வியாபாரிகள் தற்போது எங்கு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ள நிலையில் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக சந்தை இயங்கி வந்த வாடியடி நகர் பகுதிக்கு சந்தையை மாற்ற ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக பூநகரி பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் ஐயம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான தீர்மானம் மேற்படி பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

இதேவேளையில் முன்னர் சந்தை இயங்கிய இடத்தில் நீண்ட நாட்களாக மலசலகூடம் துப்புரவு செய்யாத நிலையிலும் நீர்த்தாங்கிக்கு நீர் நிரப்பப்படாமையாலும் சந்தையில் வியாபாரம் செய்வோரும் வாடிக்கையாளர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக வாடியடி சந்தை வியாபாரிகள் குற்றம் தெரிவிக்கின்றனர்.

ஆதலால் உடனடியாக நீர் விநியோகத்தை மேற் கொள்ளுமாறும் மலசலகூடத்தை துப்புரவு செய்யுமாறும் பூநகரி பிரதேச நிர்வாகத்திடம் முன்னர் சந்தை இயங்கிய பகுதியிலுள்ள வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-84)




# பொன்விழாவும் நூல் வெளியீடும்

(கண்டாவளை)

முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தின் பொன்விழா எதிர்வரும் 28 ஆம் திக்தி நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 1ஏபி பாடசாலையாக காணப்படுகின்ற முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் கடந்த 1966 ஆம் ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

பொன்விழா தொடர்பாக பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் த.அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதில் பொன்விழா தொடர்பான நூல் வெளியீடு மற்றும் பொன்விழா தொடர்பான வேலைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இக்கலந்துரையாடலில் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர். (2-315)

# வறுமையினால் கல்வியைவிட்டு இடைவிலகும் நிலைமை அதிகம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் குடும்பங்கள் தொழில் வாய்ப்பின்மை மற்றும் வறட்சி காரணமாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதுடன், இவ்வாறான குடும்பங்களில் உள்ள கூடுதலான மாணவர்கள் பாடசாலைக் கல்வியை விட்டு வறுமை காரணமாக இடை விலகுகின்ற நிலைமையும் அதிகளவில் காணப்படுகின்றது.

இதனால் இந்தக் குடும்பங்களில் வாழுகின்ற சிறார்களின் போசாக்கு மற்றும் கல்வி போன்ற விடயங்கள் பாதிக்கப்படுகின்றன.

இவ்வாறு வறுமை காரணமாக பாடசாலைகளுக்குச் செல்லாத, ஒழுங்கற்ற வரவுகளைக்கொண்ட மாணவர்களின் தொகை அண்மைய நாட்களாக அதிகரித்துக் காணப்படுகின்றன.

கிளிநொச்சி கல்மடுநகர், சம்புக்குளம், நாவல் நகர் போன்ற கிராமங்களில் இவ்வாறு நாற்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைக் கல்வியை தொடரமுடியாது உள்ளன. இதேபோல கோணாவில், அக்கராயன் ஆகிய பகுதிகளிலும் இவ்வாறான நிலைமை காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் மாணவர்களின் வரவு பாடசாலைகளில் ஓரளவு திருப்தி அளிக்கப்பட்ட போதும், தற்போது இந்த மாணவர்களின் வரவு குறைவடைந்து காணப்படுகின்றது. இவ்வாறு வறுமை காரணமாக மாவட்டத்தில் பல்வேறு பாதிப்புக்கள் காணப்படுவதாக பொது அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2-315)


# வவுனியா மாவட்ட செயலகத்தில் இப்தார் நிகழ்வு

(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்ட செயலகத்தினால் வருடாவருடம் மேற்கொள்ளப்பட்டு வரும் இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சோமரத்தின விதாரன பத்திரன தலைமையில் நடைபெற்றது. சமூக சமய நல்லிணக்கத்திற்கான இப்தார் நிகழ்வு வருடாவருடம் மாவட்ட செயலகத்தில் இடம் பெறுவது வழமையாகும்.

சமயத்தலைவர்கள், இராணுவ உயர் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், திணைக்களத்தலைவர்கள், அதிகாரி கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (2-281)





# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நடமாடும் சேவை முல்லைத்தீவில்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் அடிப்படை மனித உரிமை மீறல்கள் மற்றும் சட்ட ஆலோசனைகள் வழங்கும் நடமாடும் சேவையொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா மற்றும் யாழ்ப்பாண அலுவலகங்கள் இணைந்து எதிர்வரும் 12, 19 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை மேற்படி நடமாடும் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட மக்களை கலந்துகொண்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சேவைகளை பெற்றுக்கொள்வதோடு அடிப்படை மனித உரிமை மீறல்கள் மற்றும் சட்ட ஆலோசனைகள் என்பவற்றையும் பெற்றுக் கொண்டு பயனடையுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரியும் சட்டத்தரணியுமான வசந்தராஜ் கேட்டுக் கொண்டுள்ளார். (2-281)

# 'முல்லை விடியல்-3' மாபெரும் தொழில் மற்றும் உயர்கல்விச் சந்தை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் பெரெண்டினா தொழில் வள நிலையம் இணைந்து மூன்றாவது முறையாகவும் நடத்தும் 'முல்லை விடியல் 3 மாபெரும் தொழில் மற்றும் உயர்கல்விச்சந்தை எதிர்வரும் 16ஆம் திகதி காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

700 தொழில்வாய்ப்புக்களுடன் தொழிலாளர்கள் NVQ தர சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளும் நடமாடும் சேவை உயர்கல்விகளை தேர்ந்தெடுக்க சந்தர்ப்பங்கள் என பல்வேறு சேவைகள் அன்றைய தினம் இளைஞர், யுவதிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்கு வருகை தரும் இளைஞர், யுவதிகளை தயார்படுத்தும் நோக்கத்துடன் எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மற்றும் மறுநாள் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திலும் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திலும் நிகழ்வுகள் நடைபெற வுள்ளன.

இளைஞர், யுவதிகள் மேற்தரப்பட்ட நாட்களில் ஏதாவதொரு செயலமர்வுக்கு பங்குபற்றி மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

021 492 7500 அல்லது 077 444 0267 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம் என ஏற் பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-281)

# நுண்நிதிக் கடனினால் 59 தற்கொலைகள்; வடக்கு மாகாணத்தில் விழிப்புணர்வு பேரணி

## 14 ஆம் திகதி நடைபெறும்

(கண்டாவளை)

வடக்கு மாகாணத்தில் நுண் நிதிக்கடன் செயற்பாட்டினால் 59 இற்கும் மேற்பட்ட தற்கொலைகள் இடம் பெற்றுள்ளதுடன், தொடர்ந்தும் மக்கள் செளகரியங்களை எதிர்கொள்வதாக கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் அன்ரனி கலிஸ்சியஸ் தெரிவித்துள்ளார்.

நுண்நிதிக்கடன்களால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான ஊடக சந்திப்பொன்று நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த சம்மேளனத்தின் தலைவர் வடக்கு மாகாணத்தில் மீள் குடியமர்வின் பின்னர் மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு நுண்நிதிக் கடன்கள் உதவியாக இருந்தாலும் எதிர்காலத்தில் அதனூடாக பல அசெகரியங்களை மக்கள் எதிர்கொள்கின்றனர்.

அதாவது வடக்கு மாகாணத்தில் இந்த நுண்நிதிக் கடன் செயற்பாடுகளினால் 59 இற்கும் மேற்பட்ட தற்கொலைகள் இடம் பெற்றிருக்கின்றன. இதேபோன்று கிழக்கு மாகாணத்தில் 19 வரையான தற்கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன.

இவ்வாறு நுண்நிதிக் கடன்களால் அன்றாடம் பல்வேறுபட்ட பிரச்சினைகள் உருவாகி வருகின்றன.

இது தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் பொருட்டு எதிர்வரும் 14ம்திகதி வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வுப் பேரணிகளை முன்னெடுக்க இருப்பதாகவும் கிளிநொச்சி மாவட்டத்தின் விழிப்புணர்வுப் பேரணி கரடிப்போக்குச் சந்தியில் இருந்து மாவட்டச்செயலகம் வரை நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இதன்போது கடன்பொறிக்குள் சிக்கித் தவிக்கும் மக்கள் கடன்களை மீளச்செலுத்துவதற்கு இரண்டு வருடங்கள் காலஅவகாசத்தை வழங்குவதுடன், அதற்கான வட்டிகளையும் இரத்துச்செய்து மீளச்செலுத்த அனுமதிக்கப்படவேண்டும்.

கடன்களை உரிய நேரத்தில் திருப்பிச்செலுத்த முடியாமல் வட்டிக்கு வட்டி யும் எடுத்த கடன்தொகைக்கு மேலான தொகையை அற விடுவதை நிறுத்த வேண் டும்.

நுண்கடன் நிதி நிறுவனத்தின் வட்டி வீதங் களைக் குறைக்கவேண்டும்.

அரச வங்கிகள் ஊடான கடன்களுக்கு நிபந்தனைகளை குறைக்கவேண்டும்.

கிராம மட்டங்களில் இருக்கின்ற அமைப்புக்கள் ஊடாக கடன்களைப் பெறு வதற்கான வழிவகைகள் ஏற்படுத்தப் படவேண்டும் என்ற ஐந்து கோரிக்கைகளை தாம் முன் வைத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# வீதியோர வாகன திருத்தங்களால் பொதுமக்களுக்கு அசௌகரியம்

## உடன் தடுத்து நிறுத்த வவுனியா நகரசபை தலைவர் முடிவு

(குருமன்காடு)

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வாகன திருத்தகங்கள் போதிய இடவசதியின்றி வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்தி திருத்துவதனால் பொதுமக்கள் மற்றும் ஏனைய வாகன சாரதிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வவுனியா நகரசபை தலைவர் இ.கௌதமன் தெரிவித்தார்.

தாண்டிக்குளம், பூந்தோட்டம், இறம்பைக்குளம், சூசைப்பிள்ளையார்குளம் போன்ற பகுதிகளில் அமைந்துள்ள வாகன திருத்தகங்களை நேரடியாக சென்று பார்வையிட்ட நகரசபை தலைவர் அடங்கிய குழுவினர் குறித்த திருத்தகங்களின் உரிமம் மற்றும் இடவசதிகள் தொடர்பாகவும் ஆராய்ந்திருந்தார்.

இதன் பின்னர் ஊடகங்களிற்கு நகரசபை தலைவர் கருத்து தெரிவிக்கையில்,

வீதிகளில் வைத்து வாகனங்களை பழுதுபார்க்கும் செயற்பாடுகள் தொடர்பாக தொடர்ச்சியாக முறைப்பாடு கிடைத்தவண்ணமுள்ளது. அத்துடன் அதனால் ஏற்படும் பாதிப்புகள் வாகனத்தின் கழிவு எண்ணெய் நிலத்தடி நீரில் கலப்பது தொடர்பாகவும் முறைப்பாடு கிடைத்து வருகின்றது.

இவற்றை உடன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவையுள்ளதனால் இதற்குமப்பால் வீதிகளில் வைத்து வாகனங்களுக்கான டயர் மாற்றும் கடைகள் காணப்படுவதுடன் பாதசாரி கடவைகளை ஆக்கிரமித்தும் அவர்கள் வைத்துள்ளனர்.

இதனால் பாதசாரிகள் பெரும் இடையூறுகளுக்கு முகம் கொடுக்கின்றனர். எனவே பொலிஸாரின் உதவியுடன் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் சகல வர்த்தக நிலையங்களிற்குமான வியாபார அனுமதியை 31.07.2018 இற்கு முன்னர் பெற்றுக் கொள்ள வேண்டும். வியாபார அனுமதி முடிவடைந்தவர்கள் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

குறித்த காலப்பகுதிக்குள் உரிய நடைமுறையை பின்பற்றாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (2-250)




# புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் அலங்கார நுழைவாயில் திறப்புவிழாவும் அடிக்கல் நாட்டு விழாவும் நூல் வெளியீட்டு விழாவும்

(முல்லைத்தீவு)

வரலாற்றுச்சிறப்புமிக்க புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வளாகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணிமுதல் ஆலய அலங்கார நுழைவாயில் திறப்பு விழாவும் ஆலய அன்னதான மடத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவும் ஆலய வரலாற்று நூல் வெளியீட்டு விழாவும் இடம் பெறவுள்ளது.

அலங்கார நுழைவாயில் திறத்தல்

இதற்கமைவாக ஏ9 வீதி, புதூர்ச் சந்தியில் அமைக்கப்பட்டு அலங்கார நுழைவாயில் திறப்பு விழா காலை 8.30 மணிக்கு புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் தலைவரும் பூசகருமான இ.பூலோகசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

அலங்கார நுழைவாயிலை, வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, வவுனியா வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் ச.தணிகாசலம் ஆகியோர் இணைந்து திறந்து வைப்பார்கள். பெயர்க்கல் திரைநீக்கத்தினை லண்டனில் வாழும் திரு.திருமதி. கோபால் பிறேமா தம்பதி மேற்கொள்வர்.

அன்னதான மடத்திற்கு அடிக்கல் நாட்டல்

அன்னதான மடத்திற்கு அடிக்கல்நாட்டும் நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு ஆலயத்தில் இ.பூலோகசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அன்னதான மண்டபத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைப்பார். வாழ்த்துரையினை தமிழருவி த. சிவகுமாரன் நிகழ்த்துவார்.

வரலாற்று நூல் வெளியீடு செய்தல்

புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் ஆலய வரலாறு தோற்றம், வளர்ச்சி, அன்னதான பணி, பண்டமெடுப்பு, பொருட்கள் சேகரித்தல், வேளைக்கயிறு ஆகிய பல அதிசய வரலாறுகளைக் கொண்டு வெளிவரும் முதல் வரலாற்று நூல் முற்பகல் 11 மணிக்கு ஆலய மண்டபத்தில் வெளியீடு செய்து வைக்கப்படும். புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் கணக்காய்வாளர், ந.ஞானசுந்தரம் தலைமையில் இடம்பெறும்.

தலைமையுரையையடுத்து, நூலிற்கான வெளியீட்டுரையையும் நயவுரையையும் தமிழருவி த.சிவகுமாரனும் சிறப்புரையை புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய மூத்த உறுப்பினர் ம.செல்வரத்தினமும் நிகழ்த்துவார்கள். முதற்பிரதிகளை, வவுனியா கோவில்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுவரர் திருக்கோவில் கௌரவ செயலாளரும் ஆதீனகர்த்தாவுமான ஆறுமுகம் நவரெத்தினராசா, வவுனியா சுகாதாரத் திணைக்களத்தின் வைத்திய கலாநிதி மு.மதிதரன் ஆகியோர் பெற்றுக்கொள்வார்கள்.

ஆலயத்தின் வருடாந்தப் பெரும் பொங்கல் விழா நாளை மறுதினம் 11 ஆம் திகதி திங்கட்கிழமை வெகு சிறப்பாக இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2)

# கசிப்பு உற்பத்தி நிலையம் மடுவில் முற்றுகை

(மல்லாவி)

மடு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரணை இலுப்பைக்குளம் பகுதியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் புலனாய்வுப் பிரிவினர் முற்றுகையிட்ட போது, சந்தேக நபர்கள் இருவரையும் கசிப்பு உற்பத்தி செய்யும் கோடா இரண்டு பரல்களையும் மீட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

இரணை இலுப்பைக்குளத்தில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாக வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் அடிப்படையில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் கீழ் செயற்படும் போதை ஒழிப்பு பிரிவினர் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் 3ஆயிரம் லீற்றர் கொண்ட தலா இரண்டு பரல்கள் கோடாவையும் சந்தேக நபர்கள் 27, 25வயதுடைய இருவரையும் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்காகவும் நடவடிக்கைகளுக்காகவும் மடு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-15)

# மூன்று இலட்சம் மீன்குஞ்சுகள் மருதமடு குளத்தில் விடப்பட்டன



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள மருதமடு குளத்தில் மூன்று இலட்சம் மீன்குஞ்சுகள் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசனால் விடப்பட்டுள்ளன.

மருதமடுக்குளம் சுரோஸ் குடியிருப்பைச் சேர்ந்த பலர் இந்த குளத்தை நம்பி நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு குளத்தில் மீன்களை பெருக்கும் முகமாக வடக்கு மாகாண விவசாய அமைச்சரின் திட்ட மிடலின் கீழ் நேற்று முன்தினம் மூன்று இலட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

இந்தக் குளத்தை நம்பி தொழில் செய்யும் மக்கள் நாளாந்தம் சுமார் நூற்றிற்கு மேற்பட்ட கிலோ மீன்களைப் பிடித்து தங்கள் வாழ்வாதாரத்தை கொண்டு நடத்துகின்றார்கள்.

இங்கு மீனினங்களின் பெருக்கம் குறைவாக காணப்படுவதாக நன்னீர் மீன்பிடி சங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இந்த மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

# இலவச மருத்துவ முகாம்; மூக்குக்கண்ணாடிகள் வழங்கல்




(பனிக்கன்குளம்)

வவுனியா பூவரசன்குளம் குருக்கள் ஊர் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் ஒருநாள் இலவச மருத்துவ முகாமில் மூக்குக்கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இறம்பைக்குளம் ஈஸி மிசன் பூரண சுவிசேசபையின் அனுசரணையில் இடம்பெற்றது.

பூவரசன்குளம் பொலிஸ் நிலையத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இலவச மூக்குக்கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வில் வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகளை வழங்கி வைத்தார்.

ஒருநாள் இலவச மருத்துவ முகாமில் மூக்குக்கண்ணாடி மற்றும் சாதாரண நோய்களுக்கும் மருந்துகளும் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன. இம் முகாமில் 140இற்கும் மேற்பட்டவர்கள் மூக்குக்கண்ணாடிகளைப் பெற்றுக்கொண்டனர். (2-28)

# மேய்ச்சல் தரவை நிலங்கள் பயிர்ச்செய்கை நிலங்களாக மாற்றம்

## பண்ணையாளர்கள் கவலை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இன்மையால் பயிர்ச்செய்கை காலங்களில் கால்நடைப் பண்ணையாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

விவசாயத்தையடுத்து வருமானத்தை ஈட்டக்கூடிய ஒன்றாக கால்நடை வளர்ப்பு காணப்படுகின்றது.

இந்த நிலையில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இன்மையால் திறந்த வெளி வளர்ப்பு முறைகளில் கால்நடைகளை வளர்க்கும் கால்நடைப்பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக பண்ணையாளர்கள் பயிர்ச்செய்கை காலங்களில் மிக நீண்ட தூரங்களுக்குக் கொண்டு சென்றும் இரணைமடுக்குளம், கல்மடுக்குளம் ஆகிய குளங்களில் வைத்தும் பராமரிக்கும் நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு குளங்களில் வைத்துப் பராமரிக்கும் போது குளத்தின் நீர்மட்டம் அதிகரிக்கும் போது அவற்றை வேறு இடங்களிற்கு கொண்டு சென்று பராமரிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

எனவே கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக பண்ணையாளர்கள் தமக்கான மேய்ச்சல்தரவைகளை அமைத்துத்தருமாறு கோரிக்கை விடுத்து வருகின்றபோதும், நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

ஏற்கனவே மேய்ச்சல் தரவைகளுக்கென ஒதுக்கப்பட்ட நிலங்கள் அத்துமீறிப் பிடிக்கப்பட்டு பயிர்ச்செய்கை நிலங்களாகவும் குடியிருப்பு நிலங்களாகவும் மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# பயிற்சிநெறி மாணவர்களுக்கு வாகன இயந்திரம் கையளிப்பு



(பரந்தன்)

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் அமைந்துள்ள இலங்கை ஜேர்மன் பயிற்சிக்கல்லூரிக்கு சுல்டெக் ஓட்டில் கம்பனி பொதுமுகாமையாளரால் இயந்திரம் ஒன்று கல்லூரி அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது

இலங்கை ஜேர்மன் பயிற்சிக்கல்லூரி வளாகத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்விலேயே குறித்த இயந்திரம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஓட்டோ மொபைல் பயிற்சி நெறியில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் வாகன இயந்திரம் எவ்வாறு இயங்குகின்றது என தெளிவாக சிறந்த பயிற்சியைப் பெறும் முகமாகவே வாகன இயந்திரம் கையளிக்கப்பட்டுள்ளது. (2-312)

# ஜனாதிபதியின் செயலர், சபாநாயகரால் 3,360 மணித்தியாலங்கள் ஏமாற்றப்பட்டுள்ளேன்



## கீர்த்தி தென்னக்கோன் அதிருப்தி

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி விசாரணை தொடர்பான அறிக்கையின் இணைப்புகளை வழங்காது, ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் சபாநாயகர் ஆகிய இருவரும் தன்னை 3 ஆயிரத்து 360 மணித்தியாலங்கள் ஏமாற்றியுள்ளனரென சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் (கபே) தலைவர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கு நேற்று முன்தினம் அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பிணைமுறி மோசடி விசாரணை தொடர்பான அறிக்கையின் இணைப்புகளை தன்னிடம் வழங்குமாறு சபாநாயகர், ஜனாதிபதியின் செயலாளர், தேசியக் கணக்காய்வுத் திணைக்களம் மற்றும் வேறு நிறுவனங்களிடம் கோரியிருந்ததாக தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்த தென்னக்கோன், 2018 ஜனவரி 18ஆம் திகதி முதல் இன்று வரையான 140 நாட்களாக இணைப்புகள் கிடைக்கவில்லையெனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், மேற்படி பிணைமுறி விவகாரத்தில் பணம் பெற்றுக்கொண்டவர்களது விபரங்களைத் தருமாறு அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகிய இருவருக்கும் தான் கடிதம் அனுப்பியிருந்ததாக கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

இந்த ஆவணத்தின் இணைப்புகளைத் தன்னிடம் கையளிப்பதாக சபாநாயகரும் ஜனாதிபதியின் செயலாளரும் உறுதியளித்திருந்த போதிலும் இதுவரை அவ்விணைப்புகள் கிடைக்கவில்லையென்றும் அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## மரக்கன்றுகள் நாட்டல்



சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு பருத்தித்துறை பிரதேசசபையினரால் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

சுற்றாடல் தினத்தின் முதலாவது நாள் மர நடுகை தினமாகும். இதனை முன்னிட்டு பருத்தித்துறை பிரதேசசபையினரால் ஆனைவிழுந்தான் சந்தியிலுள்ள வாகனத்தரிப்பிடத்தில் பிரதேச சபையின் தவிசாளர் அ.சா. அரியகுமார், செயலாளர் எஸ்.ஸ்ரீபாஸ்கரன் ஆகியோர் மரக்கன்றுகளை நாட்டினர். (இ-60)

## கற்பிட்டி நகரில் மக்கள் ஆர்ப்பாட்டம்



(கற்பிட்டி)

கற்பிட்டி நகரின் பல பகுதிகளில் தொடர்ச்சியாக மின்சார விநியோகம் துண்டிக்கப்படுவதனை கண்டித்து அப்பகுதி மக்கள் நுரைச்சோலை அனல்மின் நிலையத்துக்குச் செல்லும் வீதியை மறித்து நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மின் விநியோகம் அடிக்கடி துண்டிக்கப்படுவதனால் தாம் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் விவசாயச் செய்கைகளை முன்னெடுப்பதிலும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தனர். (இ-7)

## மஹோற்சவ கால சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கு - கருப்பை ஜெகதாம்பிகை சமேத வேதபுரீஸ்வரர் தேவஸ்தான மஹோற்சவ காலச்சொற்பொழிவு ஆலய மண்டபத்தில் எதிர்வரும் 12.06.2018 ஆம் திகதியில் இருந்து 21.06. 2018 வரை தினம் தோறும் இரவு 8 மணிக்கு இடம்பெறும் என சமயஜோதி க.நிஜலிங்கம் அறிவித்துள்ளார்.

இதில் சொற்பொழிவாளர்களாக சைவப்புலவர்கள் ச.முகுந்தன், செ.த.குமரன், கா.கமலநாதன், பொன்.சந்திரவேல், இளஞ்சைவப்புலவர்கள் ச.நவநீதன், க.கைலநாதன் த.மனோஜ்குமார் சைவநெறிச் சன்மார்க்கர் நித்தியபாபுதரன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். (இ-7)

## ஊர்காவற்றுறை ஆதிவைரவர் ஆலயத்துக்கு அன்னதான மண்டபப் பொருட்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தீவகம், ஊர்காவற்றுறை ஆதிவைரவர் ஆலயத்துக்கு தனது 2018 ஆம் ஆண்டுக்கான வடமாகாணசபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து ரூ.50,000/= பெறுமதியான அன்னதான மண்டபத்துக்குத் தேவையான சமையல் பாத்திரங்கள், மற்றும் பொருட்களை வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் வழங்கினார்.



நேற்று முன்தினம் காலை தீவகம் வடக்கு (ஊர்காவற்றுறை) பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மேற்படி பொருட்களைவடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், ஊர்காவற்றுறை ஆதிவைரவர் ஆலய நிர்வாகத்தினரிடம் வழங்கி வைத்தார். (இ-7)




# இராஜாங்க அமைச்சர் பாலிதவின் மகன் கைது

## மதுபோதையில் வாகனம் செலுத்தியதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டாரவின் மகன்,யசோத ரங்கே பண்டார கைது செய்யப்பட்டுள்ளார்.

மது போதையில் வாகனம் செலுத்தி விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீஜெயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த இவரை, ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளதுடன், சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.



யசோத ரங்கே பண்டார.

திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சுக்கு சொந்தமான கப் வாகனத்தை, செலுத்திச்சென்ற போது, சிலாபம்- புத்தளம் வீதியின் பங்கதெனிய பகுதியில் வைத்து, கப் வாகனம் கடந்த 6 ஆம் திகதி விபத்துக்குள்ளாகியது.

விபத்தின் போது யசோத ரங்கேபண்டார,மது போதையில் இருந்ததாக மருத்துவ பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், அமைச்சுக்குரிய வாகனத்தை செலுத்திச் சென்றமை, மது போதையில் வாகனம் செலுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

# பாரதம்

## பேரறிவாளனின் விடுதலையை வலியுறுத்தி தாய் அற்புதம்மாள் மீண்டும் கடிதம்



(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், ஆயுள் தண்டனை பெற்றுள்ள பேரறிவாளனை விடுதலை செய்யுமாறு அவரது தாய் அற்புதம்மாள் கோரியுள்ளார்.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி, அவர் தமிழக அரசுக்கு மீண்டும் மற்றுமொரு கடிதத்தை கடந்த புதன்கிழமை எழுதியுள்ளார்.

பேரறிவாளன் சிறையில் அடைக்கப்பட்டு 27 வருடங்கள் கடந்த நிலையிலும், அவரை விடுதலை செய்வதில் தொடர்ந்தும் இழுபறி நிலைமைகள் இடம்பெறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதற்காக 27 வருடங்களாக அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்ற விடயம் புரியாமல் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பேரறிவாளன் உட்பட சிறை வைக்கப்பட்டுள்ள எழுவரையும் விடுதலை செய்யும் தீர்மானத்தை, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் நிறைவேற்றியதனையும் அவர் நினைவுபடுத்தியுள்ளார்.

தனக்கு 71 வயதாவதாகவும், இதுவரையில் தனது மகனை மீட்க முடியாமல் இருப்பதை எண்ணி மன உளைச்சல் அடைந்துள்ளதாகவும் அற்புதம்மாள் கூறியுள்ளார்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அற்புதம்மாள் கோரியுள்ளார். (7)

## சிங்கப்பூர் சந்திப்பு சுமுக...
## கிம்மை அமெரிக்காவுக்கு...

(வோஷிங்டன்)

அடுத்த வாரம் சிங்கப்பூரில் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உடனான பேச்சுவார்த்தை சுமுகமாக நடந்தால் அவரை அமெரிக்காவுக்கு வருமாறு அழைப்பு விடுப்பேன் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர் எதிர்வரும் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் சந்தித்து பேசவுள்ளனர். அவர்கள் சிங்கப்பூரில் உள்ள சென்ட்டோசா தீவில் கேபெல்லா ஹோட்டலில் காலை 9 மணிக்கு சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர் என வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் சாரா சாண்டர்ஸ் தெரிவித்தார்.

இந்நிலையில், அடுத்த வாரம் சிங்கப்பூரில் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உடனான பேச்சுவார்த்தை சுமுகமாக நடந்தால் அவரை அமெரிக்காவுக்கு வருமாறு அழைப்பு விடுப்பேன் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு குறித்து ஆலோசனை நடத்துவதற்காக ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே அமெரிக்காவுக்கு சுற்றுப்பயணம் செய்து அமெ-

### ட்ரம்ப் பகிரங்க...



ரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை சந்தித்து பேசினார்.

## தூத்துக்குடி துப்ப...
## அரசியல் க...
## ஆதாயம் தே...
### ஸ்டெர்லைட் எதிர்ப்பு இயக்...

(தூத்துக்குடி)

தூத்துக்குடி துப்பாக்கி சூட்டில் 13 பேர் பலியானதை வைத்து அரசியல் கட்சிகள் ஆதாயம் தேட முயற்சிப்பதாக ஸ்டெர்லைட் எதிர்ப்பு இயக்கம் குற்றச்சாட்டி உள்ளது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்பு இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,


1994 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் ஆட்சிப் பொறுப்புகளில் இருந்த காங்கிரஸ் கட்சியும், பா.ஜனதா கட்சியும் வேதாந்தா நிறுவனத்திற்கு உறுதுணையாக இருந்தன. ஸ்டெர்லைட்டுக்கு ஏற்பட்ட நெருக்கடியின் போது, வேதாந்தா நிறுவனத்தை பாதுகாத்தவர்களும் இக்கட்சியின் தலைவர்களே.

இக்கட்சிகளின் முன்னாள்- இந்நாள் தலைவர்களும், உள்ளூர் தலைவர்களும், 22 ஆண்டுகளாக ஸ்டெர்லைட் இயங்குவதற்கு உறுதுணையாக இருந்தார்கள் என்பது மட்டுமல்ல இந்த ஆலையால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் சீரழிவுகளுக்கும், புற்றுநோய்க்கு ஆளாகி மக்கள் கொல்லப்படுவதற்கும், 2018 மே 22 அன்று 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கும் முழுப் பொறுப்பேற்க வேண்டிய முதற் குற்றவாளிகள் ஆவார்கள்.

1994 ஆம் ஆண்டு முதல் 2018 வரை வேதாந்தா நிறுவனத்திற்கு உறுதுணையாக இருந்த தி.மு.க, அ.தி.மு.க தலைவர்கள் இன்று "ஸ்டெர்லைட்டை மூடு" என்றும், "ஸ்டெர்லைட்டை மூடிவிட்டோம்" என்றும் நாக்கு கூசாமல் பேசுகின்றனர். பாதிக்கப்பட்ட குடும்பத்தாரிடம் நிதியுதவி அளித்து தங்களுடைய குற்றச் செயல்களில் இருந்து தப்பிக்க வழி தேடுகின்றனர்.

தி.மு.க வுடனும், காங்கிரசுடனும் கூட்டணி அமைத்துள்ள ம.தி.மு.க உள்ளிட்ட கட்சிகளும் இக்குற்றவாளிகளோடு கூடி ஸ்டெர்லைட் எதிர்ப்பு நாடகமாடுகின்றன. வரப்போகும் தேர்தலில் மக்கள் சாவுகளை முன் வைத்து அரசியல் ஆதாயம் தேடவும் முயல்கின்றன.

தூத்துக்குடி மக்கள் கடந்த 22 ஆண்டுகளாக ஸ்டெர்லைட் ஆலைக்கு




எதிராக போராடி வந்ததால் 28 ஆம் திகதி இந்த ஆலைக்கு நிரந்தரமாக பூட்டுப் போடுகிறோம் என்று தமிழக அரசு அறிவித்தது. இந்த ஆலை தூத்துக்குடியில் இருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும் என் பதில் மக்கள் முனைப்பாக இருக்கின்றனர். சட்டமன்றத்தின் மூலம் அதற்கான சிறப்பு சட்ட வடிவத்தை நிறைவேற்றாமல், அரசாணை என்ற மழுப்பல் அறிக்கை என்பது வேதாந்தா நிறுவனத்தை பாதுகாக்கவே வழிவகுக்கும்.

நிலம், நீர், காற்று, கடல் என தூத்துக்குடியின் சுற்றுச்சூழலையும் இயற்கை வளங்களையும் சீரழித்த பெருங்குற்றத்திற்காக வேதாந்தா தலைவர் அனில் அகர்வாலும், ஸ்டெர்லைட் உயரதிகாரிகளும் கடுமையான குற்ற வழக்குகளின் கீழ் கைது செய்யப்பட வேண்டும். வேதாந்தாவின் ஸ்டெர்லைட் ஆலைக்கு அரசுகள் அனுமதியளித்ததால் பல்லா

## நீட் தேர்வு திட்டமிட்ட நயவஞ்சக செயல்

### வைகோ காட்டம்



(சென்னை)

நீட் தேர்வு என்பது திட்டமிட்ட நயவஞ்சக செயல் என, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

கோவையில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை, செய்தியாளர்களை சந்தித்த வைகோ மேற்படி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டு வைத்தியர்கள் தான் இன்று அமெரிக்கா, அவுஸ்திரேலியா என்று பல்வேறு நாடுகளிலும் புகழ் பெற்று திகழ்கின்றனர் எனக் கூறிய அவர், பிளஸ்-2 பரீட்சையில் 91 வீதம் சித்தியெய்திய மாணவர்கள் நீட் தேர்வினால் தோல்வி கண்டுள்ளமை மன வேதனைக்குரியது என்றார்.

எனவே திறமையான தமிழக மாணவர்களை திட்டமிட்டு வஞ்சிக்கும் செயலே நீட் பரீட்சை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (7)

## வெட்டப்பட்ட பாம்பின் தலை கடித்ததில் இளைஞர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி



(ஹூஸ்டன்)

அமெரிக்காவில் வெட்டப்பட்ட பாம்பின் தலை கடித்ததில் வாலிபர் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அமெரிக்காவில் உள்ள ஹூஸ்டன் நகரை சேர்ந்தவர் ஜெனிபர் சுட்கிளிப். கடந்த மாதம் மே 27 ஆம் திகதி இவரது கணவர் தோட்டத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது அங்கு ரோட்டில் சிலோக் எனப்படும் கிலுகிலுப்பை பாம்பு ஒன்று ஊர்ந்து சென்று கொண்டிருந்தது.

அதை பார்த்த அவர் பாம்பின் தலையை வெட்டினார். அதை அங்கிருந்து அகற்ற வெட்டப்பட்ட பாம்பின் தலையுடன் தூக்கிச் சென்றார். அப்போது வெட்டிய பாம்பின் தலை அவரை கடித்தது.

கிலுகிலுப்பை பாம்பின் விஷம் கடுமையானது. அது அவரது உடலில் வேகமாக பரவியது. அதனால் மயக்கம் அடைந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த அவருக்கு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

தற்போது அவர் கண் பார்வையை இழந்து விட்டார். உடலில் உள்ள உறுப்புகளில் இரத்தக் கசிவு உள்ளது. எனவே, உயிர் பிழைக்க மாட்டார் என வைத்தியர்கள் கைவிரித்து விட்டனர். (7)

# வெளிநாடு



# ...மாக நடந்தால் ...கு அழைப்பேன்

## ...க அறிவிப்பு



அதன்பின்னர் புளோரிடாவில் ...ய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப்,

வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுடன் சிங்கப்பூரில் நடக்க உள்ள சந்திப்பு வடகொரியாவிற்கு ஒரு புதிய எதிர்காலத்தின் தொடக்கத்தை பிரதிபலிக்கும்.

உண்மையை சொல்லப்போனால் உலகிற்கு ஓர் பிரகாசமான புதிய எதிர்காலம்.

இந்த சந்திப்பு சுமுகமாக முடிந்தால் அடுத்த 5 நாட்களுக்குள் கிம் ஜாங் உன்னை அமெரிக்காவுக்கு வருமாறு அழைப்பு விடுப்பேன் என தெரிவித்தார். (7)

# ...ாக்கிச் சூடு ...ட்சிகள் ...ட முயற்சி

## ...கம் குற்றச்சாட்டு



...டுகளாக சீரழிக்கப்பட்ட இயற்கை ...ளங்களை சீரமைக்க வேண்டியதும், துப்புரவுப்படுத்த வேண்டியதும் ...ரசுகளின் கடமையாகும்.

எனவே சீரமைப்பு பணிகளுக்கு ...வைப்படும் பெருஞ்செலவுகளுக் ...க வேதாந்தா நிறுவனத்தின் ...னைத்து சொத்துகளும் பறிமுதல் ...ய்யப்பட வேண்டும். ஸ்டெர்லைட் ...ல் சீரழிக்கப்பட்ட தூத்துக்குடி ...டாரத்தில் சீர்கேடுகளை ஆய்வு ...ய்ய உண்மை அறியும் குழுவை ...மிக்கவும், அதில் எதிர்ப்பு இயக்கம் ...ர்பாக அறிவியலாளர்கள் (விஞ்ஞா...கள்) பங்கேற்கவும் அரசு வழி ...ய்ய வேண்டும்.

தூத்துக்குடி வட்டாரத்தில் வாழும் ...களின் உடல் நிலையை கண்டறிய ...யர் மருத்துவக் குழுவை நியமித்து ...சின் முழுப்பொறுப்பிலான சிறப்பு ...ந்துவ உதவிகளை வழங்க ...வண்டும்.

முற்றுகை போராட்டத்தில் கொல்லப்பட்ட 13 பேரின் குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் அரசு உதவித்தொகை வழங்குவது மட்டும் தீர்வல்ல. சுற்றுச்சூழல் சீர் கேடுகளால் தோல் நோய், மூச்சிளைப்பு நோய், புற்றுநோய்என இதுவரை பாதிக்கப்பட்டவர்களையும் கண்டறிந்து அவர்களுக் குரிய இழப்பீட்டுத் தொகையும் அரசு வழங்க வேண்டும்.

துப்பாக்கிச் சூட்டில் மக்களை குறிபார்த்து சுடும் அதிநவீன துப்பாக்கிகளை பயன்படுத்த திட்டமிட்டவர்கள் யார்? அதற்கான நடவடிக்கையில் அமைச்சரவையின் பங்களிப்பு என்ன? என்பது பற்றி அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

மேலும் அதற்கான ஆணிவேராக, மூளையாக செயற்பட்ட -தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் பொறுப்பில் இருந்த வெங்கடேஷ், மாவட்ட பொலிஸ் அதிகாரியாக இருந்த மகேந்திரன், டி.எஸ்.பி செல்வ நாகரத்தினம், சிப்காட் பொலிஸ் நிலைய ஆய்வாளர் ஹரிஹரன் ஆகிய உயரதிகாரிகளின் மீது கொலைக் குற்றத்திற்கான வழக்குகள் பதிவு செய்யப்பட வேண்டும். (7)

# புயிகோ எரிமலை வெடிப்பால் பலி எண்ணிக்கை 110 ஆக உயர்வு

## மீட்புப் பணிகள் தொடர்கிறது

கவுதமாலா நாட்டில்புயிகோ எரிமலை வெடித்து சிதறியதில், பலியானோர் எண்ணிக்கை 110 ஆக உயர்ந்துள்ளதாக மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர். மத்திய அமெரிக்க நாடுகளில் ஒன்று



கவுதமாலாவில் உள்ள புயிகோ என்ற எரிமலை கடந்த ஞாயிற்றுக் கிழமை வெடித்துச் சிதறியது.


அதிலிருந்து எரிமலைக் குழம்புகளும், சாம்பல் துகள்களும் பரவின. ஏராளமான வீடுகளை எரிமலை குழம்புகள் மற்றும் சாம்பல் சூழ்ந்ததால் பொதுமக்கள் சிக்கிக் கொண்டனர்.

கவுதமாலா சர்வதேச விமான நிலையம் உடனடியாகமூடப்பட்டது. கடும்சவால்களுக்கு மத்தியில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் எரிமலையை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள்வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்த எரி மலை வெடிப்பினால்நேற்று வரை 99 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற மீட்பு பணியின் போது மேலும் 10 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன.

இதன்மூலம் கவுதமாலா எரிமலை வெடித்து சிதறியதில் பலியானோர் எண்ணிக்கை 110 ஆக உயர்ந்துள்ளது. (7)



# றம்ழான் நோன்பை முன்னிட்டு தலிபான்களுடன் தற்காலிகமாக போர் நிறுத்தம்


## ஆப்கான் ஜனாதிபதி அறிவிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் றம்ழான் நோன்பை முன்னிட்டு தலிபான்களுக்கு எதிராக நடைபெற்று வரும் உள்நாட்டு போரை 5 நாட்களுக்கு நிறுத்துவதாக ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கனி அறிவித்துள்ளார்.

இதேவேளை வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புக்களான அல்கொய்தா மற்றும் ஐ.எஸ்.பயங்கரவாதிகளுக்கு எதிரான போர் தொடர்ந்தும் நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் வன்முறை போரினால் மக்களின் மனதை வெற்றிகொள்ள முடியாது எனவும் மாறாக பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவது மக்களிடமிருந்து தலிபான்களை இன்னும் அந்நியப்படுத்தவே செய்யும் என்பதை தலிபான் அமைப்பு புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு இந்த தற்காலிக போர் நிறுத்தம் அவர்களுக்கு ஒரு வாய்ப்பாக அமையும் எனவும் ஆப்கான் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.



ஆனால் இந்த போர் நிறுத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டதா இல்லையா என்பது தொடர்பில் தலிபான் அமைப்பிடமிருந்து எதுவித அறிவிப்பும் இதுவரை விடுக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (7)

# தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு தொடர்பில் பிரதமர் - ஆளுநர் இடையே பேச்சுவார்த்தை

(டில்லி)

பிரதமர்நரேந்திரமோடியை சந்தித்து, தூத்துக்குடி துப்பாக்கி தாக்குதல் தொடர்பில் தமிழக ஆளுநர் பன்வாரிலால்புரோகித்கலந்துரையாடியுள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆளுநர்கள் மாநாட்டில் பங்கேற்ற தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசியுள்ளார்.

இதேவேளை இக் கூட்டம் நிறைவடைந்ததும் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தையும் ஆளுநர் சந்தித்து பேசினார்.




முன்னதாக, தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக போராட்டம் நடத்தியவர்கள் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் உயிரிழந்தனர். 30இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக உள்துறை அறிக்கை கோரியிருந்தது.

ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் நேரில் தூத்துக்குடி சென்று, அங்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களைச் சந்தித்திருந்தோடு குடும்பங்களுக்கு தனது ஆறுதலை தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், பிரதமர் மோடியுடனான சந்திப்பின் போது, தூத்துக்குடி விவகாரம்தொடர்பாகவும்விவாதித்ததாகக் கூறப்படுகிறது. (7)

# அலோசியஸின் மென்டிஸ் நிறுவனத்திடம் 3மில்லியன் பெற்ற இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும், அர்ஜுன் அலோசியஸ்க்குச் சொந்தமான மென்டிஸ் நிறுவனத்திடம் இருந்து 3 மில்லியன் ரூபா பெறுமதியான காசோலைகளை இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க பெற்றுக் கொண்டுள்ளார்.

கொழும்பு - கோட்டே நீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்கில் நேற்று முன்தினம் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கோத்தாகொட சமர்ப்பித்த பி அறிக்கையிலேயே இதுபற்றிக் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தை இராஜாங்க அமைச்சர் தனது தேர்தல் பரப்புரைக்குப் பயன்படுத்தியுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

2015-16 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூன்று கட்டங்களாக தலா ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான காசோலைகளை அவர் பெற்றிருக்கிறார்.

அமைச்சர் சுஜீவ சேனசிங்கவின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் இந்தக் காசோலைகளில் ஒன்றை 2015 ஆம் ஆண்டு கொம்பனி வீதியில் உள்ள வங்கியொன்றில் மாற்றியுள்ளார்.

மேலும் இரண்டு காசோலைகள், அமைச்சரின் பாதுகாப்புக்கான பொலிஸ் அதிகாரிகளால் மாற்றப்பட்டுள்ளன என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, முன்னாள் மத்திய வங்கி ஆளுனர் அர்ஜுன மகேந்திரனின் 3.2 மில்லியன் ரூபா கடனட்டைக் கொடுப்பனவையும் மென்டிஸ் நிறுவனம் கொடுத்து தீர்த்திருப்பதாகவும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, மென்டிஸ் நிறுவனத்திடம் இருந்து 3 மில்லியன் ரூபா பெறுமதியான காசோலைகளை தனது பரப்புரைக் குழு பெற்றுக் கொண்டது பற்றி, தான் அறிந்திருக்கவில்லை என்று இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

2015 நாடாளுமன்றத் தேர்தலில் தமக்கான பரப்புரைகளை ஐந்து குழுக்கள் மேற்கொண்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

“இந்தக் குழுக்கள் நலன் விரும்பிகளிடம் இருந்து நன்கொடைகளை பெற்றன. எல்லா நிதி நடவடிக்கைகளையும் அமல் என்பவரே கையாண்டார்.

அந்தக் குழுக்கள் மென்டிஸ் நிறுவனத்திடம் நன்கொடை பெற்றது பற்றி நான் அறியவில்லை. அறிந்திருந்தால், அதனைப் பெறுவதற்கு அனுமதித்திருக்கமாட்டேன்” என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# கீத் நொயர் கடத்தல் - விசாரணையை எதிர்கொள்ளத் தயார் என்கிறார் மகிந்த



(கொழும்பு)

ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக, குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வாக்குமூலம் அளிப்பதற்கு தாம் எந்த நேரமும் தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

இதுகுறித்து நேற்று முன்தினம் கருத்து வெளியிட்ட மகிந்த ராஜபக்ஷ, “இந்த வழக்குத் தொடர்பாக வாக்குமூலம் ஒன்றை வழங்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் என்னிடம் கோரியிருந்தனர்.

ஆனால் வாக்குமூலம் அளிப்பதற்கான நேரத்தை இன்னமும் அவர்களுக்குக் கொடுக்கவில்லை.

எனக்கு எதிராக பழி வாங்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் அவ்வப்போது மேற்கொண்டு வருகிறது. என்னைத் தொடர்ந்து தொந்தரவுக்கு உட்படுத்தி வருகிறது.

கீத் நொயர் கடத்தல் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் என்னிடம் விசாரிக்க வரவுள்ளனர் என்பதை அறிவேன்.

எந்த நேரத்திலும் விசாரணைக்கு முகம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்” என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஒன்ராரியோ மாகாணத் தேர்தலில் ஈழத் தமிழர் விஜய் வெற்றி



(ஒன்ராரியோ)

கனடாவின் ஒன்ராரியோ மாகாணத் தேர்தலில் ஈழத் தமிழரான, விஜய் தணிகாசலம் 1000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

ஒன்ராரியோ மாகாண தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது.

இதில், ஸ்காபரோ ரூஜ் பார்க் தொகுதியில், முற்போக்கு கொன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட விஜய் தணிகாசலம் என்ற ஈழத் தமிழ் இளைஞன் வெற்றி பெற்றுள்ளார்.

இவருக்கு, 16,224 வாக்குகள் கிடைத்துள்ளன. இவரை எதிர்த்துப் போட்டியிட்ட, தேசிய ஜனநாயக கட்சியின் பெலிசியா சாமுவெல், 15,261 வாக்குகளைப் பெற்றார். இவரை, சுமார், 963 வாக்குகள் வித்தியாசத்தில் விஜய் தணிகாசலம் தோற்கடித்தார்.

42,015 வாக்காளர்கள் வாக்களித்த ஸ்காபரோ ரூஜ் பார்க் தொகுதியில் விஜய் தணிகாசலத்துக்கு 38.61வீத வாக்குகளும், பெலிசியா சாமுவெலுக்கு 36.32 வீத வாக்குகளும் கிடைத்தன.

இவர்களை அடுத்து, லிபரல் கட்சி வேட்பாளர் சுமி சான் 8,785 வாக்குகளையும், பசுமைக் கட்சியின் வேட்பாளர் பிரியன் டி சில்வா 1014 வாக்குகளையும் பெற்றனர்.

ஒன்ராரியோ மாகாண தேர்தலின் ஈழத் தமிழர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருப்பது இதுவே முதன்முறையாகும். (இ-7)

# அலோசியஸ், பலிசேனவின் வழக்கு விசாரணையை துரிதப்படுத்தவும்

## நீதிபதி உத்தரவு





(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகியோரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் லங்கா ஜெயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைப்பது பொருத்தமற்ற நடவடிக்கை என்பதனால், கூடிய விரைவில் விசாரணையை முடிவுக்குக் கொண்டுவருமாறும் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## சொல்வதற்கு இதுவா நேரம்?

நாம் மற்றவர்களுக்கு ஏதேதோ சொல்ல நினைக்கிறோம். அதை உடனே சொல்லிவிடவும் துடிக்கிறோம். அப்புறம் நமக்கு மறந்து போய்விடுமே என்று அவசரப்படுகிறோம்.

இந்த உணர்வுகளால் சில தவறுகள் நிகழ்ந்துவிடுகின்றன.

முதலாவது சூழ்நிலை தெரியாமல் பேசுவது, பலரை வைத்துக் கொண்டு கோபித்துக் கொள்வதையோ அதிகாரம் செய்வதையோ ஒரு சிறு பிள்ளை கூட இந்தக் காலத்தில் விரும்புவது இல்லை. எனவே விரும்பத் தகாத சூழ்நிலையில் நாம் வாயைத் திறக்க வேண்டியதில்லை.

சூழ்நிலை விடயத்தில் இன்னொரு தவறும் நிகழ்வது உண்டு. சம்பந்தமில்லாத இடத்தில் சம்பந்தமில்லாத விடயத்தைத் திணிப்பது. மகிழ்ச்சியான கணங்களில் தங்களது சொந்தக் கதை, சோகக் கதைகளைத் திணிப்பதை இதற்கு உதாரணங்களாகக் கூறலாம். அவசரமான நேரத்தில் சாவகாசமாகப் பேசக் கூடிய விடயங்களைச் சொல்வதும் இந்த ரகத்தில் அடங்கும். முக்கியமான கட்டங்களில் முக்கியமற்ற விடயங்களை விவாதிப்பதும் இதே ரகம் தான்.

ஒருவருக்கு ஒன்றையும் கேட்டுக் கொள்ளும் மனநிலை இல்லாதபோது அவரிடம் போய்க் காச் மூச் என்று கத்துவதோ அவரை மடக்கப் பார்ப்பதோ எடுபடாத வேலை.

அவரது கோபம் அடங்கி இயல்பு நிலைக்குத் திரும்பியதும் பேச ஆரம்பித்தால் அவர் கேட்டுக் கொள்வார்.

ஒருவருக்கு எதையோ கொட்டித் தீர்க்க வேண்டும் என்கிற நினைப்பு வந்துவிட்டால் அவரை முழுமையாய்ப் பேச அனுமதிக்க வேண்டும். அவர் விடயம் வெளிவராதவரை நாம் சொல்வது ஒன்றும் எடுபடாது.

ஒருவர் நம்மீது கோபமாக இருக்கின்றார். வருத்தமாக இருக்கிறார். “என் மீது என்ன கோபம்” சொல்லுங்க!” என்று கேட்டு அவரை முழுமையாகப் பேச அனுமதிக்காத வரை நாம் சொல்லுகிற எதுவும் அவர் காதில் ஏறவே ஏறாது.

இந்த ரேப் ரெக்காடர் இருக்கின்றதே, அதில் ‘ப்ளே’ யை மட்டும் அமுக்கினால் போதாது. அதனுடன் உள்ள ‘ரெக்’கையையும் அழுத்த வேண்டும். அப்போது தான் நாம் சொல்வதை அது பதிந்து கொள்ளும்.

ரெக்கார்டரை அழுத்திவிட்டுப் பதிவு செய்ய வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்வது மிகமிக அவசியம்.

லேனா தமிழ்வாணன்

# நல்லூர்க் கந்தனுக்கு இன்று கர்ப்பூரத்திருவிழா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இன்று கர்ப்பூரத் திருவிழா. கலியுக வரதன் கந்தனுக்கு இன்று மணவாளக் கோல நன்னாள் ஆகையால் பகல் 1008 சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறுகின்றது.

எம் பெருமான் சரவணபவன் ஆறுமுகனுக்கு ஆறு பஞ்சாராத்தி காட்டி விசேட அபிஷேக ஆராதனைகள் இடம் பெறுகின்றன. இது ஒரு சிறப்பு மிக்க புண்ணிய நாளாகும்.

நல்லூர் கோயிலே இன்று மகர தோரணங்களாலும் வாழை, கமுகு மரங்களாலும் செவ்விளநீர் குலைகளாலும் மாவிலையோடு மாலைகள் கட்டி, அலங்காரஞ் செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். அழகன் முருகனுக்கு இன்று நிகழ்கின்ற கர்ப்பூரத் திருவிழாவைக் காண்பதற்கு யாழ்.குடாநாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் அடியார் பெருமக்கள் இங்கு வந்து குழுமுவர்.



எங்கு திரும்பினாலும் நெற்றியில் நீறு துலங்க "முருகா முருகா" என்று நாம செபஞ் செய்தபடி அன்பர்கள் வழி பாடியற்றுவதை இன்று கண் குளிரக் காணலாம்.

எம் பெருமான் சண்முகப் பெருமானுக்கும் அருட் சக்திகளான வள்ளி தெய்வயானைக்கும் இன்று மாலை 4 மணியளவில் திருக்கல்யாணமும் நிகழவுள்ளது. அழகே ஒருருவெடுத்தாற் போன்று அம்பிகைகள் இருமருங்கும் அமர்ந்து, அருள் பாலிக்க அழகன் முருகன் மாப்பிள்ளைக் கோலத்தில் வீற்றிக்கும் காட்சி பக்திபூர்வமானது.


திருக்கல்யாணம் நிறைவுக்கு வந்ததும் சுவாமி அழகிய பூந்தண்டிகை ஊர்தியிலே பவனி வந்து அருள் சுரக்கும் அழகே தனி. இந்தப்புனித புண்ணிய நாளிலே கந்தனைக் கைதொழுதால் வாழ்வில் எல்லா நலன்களும் கிடைக்கப் பெறலாம். ஆதலால் முருகன் அடியார்கள் அனைவரும் இன்று நிகழும் கர்ப்பூரத்திருவிழாவிலே கலந்து கொண்டு நல்லூர் கந்தப் பெருமானின் கருணைக்குப் பாத்திரமாக வேண்டுமென்று அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கின்ற கந்தப் பெருமானின் திருவருள் நலத்தால் வாள்வெட்டுக் கலாசாரம் நீங்கி வாழ் வாங்கு வாழும் நல்லெண்ணம் பரந்து விரிந்து எல்லோரும் சுகமே வாழ அவனருளையே நாடி நிற்போமாக.

தெய்வத்தமிழ்ச்சுடர்
இராசையா ஸ்ரீதரன்

# மகிந்தவின் ஆசியின்றி மைத்திரியால் மீண்டும் போட்டியிட முடியாது

## டிலான் திட்டவட்டம்



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் ஆசியின்றி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், 2020 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது என்று, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஜனாதிபதி மைத்திரியாலசிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், இணைந்து செயற்பட இணங்கியுள்ளனர்.

2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குப் பொருத்தமானவர் என்று, ராஜபக்ஷ சகோதரர்களான, கோத்தபாய, பசில், சமல் மற்றும் எஸ்.பி. திஸாநாயக்க என்று பல்வேறு தரப்பினரும் பல்வேறு பெயர்களை முன்மொழிகின்றனர்.

அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவோ, அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபாலசிறிசேன தான் என்று கூறுகிறார்.

அதனை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், அவர் போட்டியிடுவதற்கு மகிந்த ராஜபக்ஷவின் ஒப்புதலும் வேண்டும். அவரது ஆசி இருக்க வேண்டும்" என்றும் டிலான் தெரிவித்துள்ளார். (இ-7)

# வலி.வடக்கில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்ட பணம் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட்ட பணம் இடைநிறுத்தப்பட்டதால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். இது தவிர காணியற்ற முகாம் மக்களுக்கு வழங் கப்பட்ட காணி களிமண் காணியாக காணப்படுவதால் கட்டப்படும் வீடுகளின் சுவர் கள் மற்றும் அத்திபாரங்க ளில் வெடிப்புகள் ஏற்படுவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ள னர்.

27 வருடங்களுக்குப் பின்னர் வலி.வடக்கில் மயிலிட்டி, தையிட்டி உட்பட பல கிராமங்களில் காணிகள் படிப்படியாக இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டன. இந்த நிலையில் மேற்படி காணிகளில் மக்கள் மீள் குடியமர ஆரம்பித்துள்ள நிலையில், அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதில் இழுபறி நிலை காணப்படுவதோடு, வழங்கப்பட்ட உதவிகளும் பெரும்பாலும் பொருத்தமற்றவையாகவேயுள்ளன எனவும் அப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

நீண்ட காலத்தின் பின்னர் தமது காணிகளுக்குள் கால் வைத்த மக்கள், தங்கள் காணிகளில் மீள் குடியமர்வதற்கான வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். இதில் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வந்த வீட்டுத்திட்டத்தை பெற்ற மக்கள் தமது காணிகளில் வீடுகளை கட்டுவதற்கு ஆரம்பித்துள்ளனர். இவ்வாறு வீடுகள் கட்டப்பட்டு கொண்டு வந்த நிலையில், அரசால் வழங்கப்பட்டு வந்த வீடமைப்புக்கான நிதியில் 3 இலட்சம் ரூபாய்கள் மட்டுமே வழங்கப்பட்ட நிலையில், அந்த நிதி தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அம்மக்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் பிரதேச செயலகத்திடம் தாம் கேட்ட போது மீள்குடியேற்ற அமைச்சு தமக்கு இன்னமும் நிதியை வழங்கவில்லை என கூறியதாக மக்கள் தெரிவித்தனர்.

மேலும் தங்கள் பணத்தில் வீட்டுக் கட்டுமான பணிகளை முடித்து விட்டு, பின்னர் அரசு தருகின்ற பணத்தை தாங்கள் பெறுவதற்கும் அதிகாரிகள் சம்மதம் தெரிவிக்கின்றனர் இல்லை. அடுத்த கட்டமாக எதிர்வரும் டிசெம்பர் மாதமே பணம் வழங்குவார்கள் எனவும், அதுவரை தங்கள் வீடுகளை எவ்வாறு கட்டி அரைகுறையில் வைத்திருப்பது, மழை காலங்களில் தற்போது உள்ள ஓலை குடிசைகளில் எவ்வாறு தாம் வாழ்வது எனவும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தவிர மயிலிட்டியை சேர்ந்த காணியற்ற முகாம் மக்களுக்கு அல்லது ஒரு பரப்புக்குறைவான காணியை கொண்ட மக்களுக்கு வீடு கட்டுவதற்காக தையிட்டியில் அரசாங்கத்தால் காணி வழங்கப்பட்டுள்ளது. அந்த காணி களிமண் காணியாக காணப்படுவதால் கட்டப்படும் வீட்டுச் சுவர்களில் தற்போதே வெடிப்புக்கள் ஏற்பட ஆரம்பித்துள்ளது எனவும் அம் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (இ-4)







யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் ம.நிரேஸ்குமாரின் "புளியமரத்து பேய்கள்" நூல் வெளியீட்டு விழாவின் போது யாழ்.இந்துக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் ஐயம்பிள்ளை தயானந்தன் மங்கல விளக்கேற்றுவதையும் தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன் உரையாற்றுவதையும் விழாவின் தலைவர் பீடாதிபதி கலாநிதி அமிர்தலிங்கம் வெளியிட்டு வைக்க, நூலாசிரியரின் தாயார் பெற்றுக்கொள்வதையும் பெரியோர் கௌரவிப்பு நிகழ்வில் நவரட்ணம் தம்பதிகள் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: சமந்தி)

## கம்மன்பிலவின் கட்சி விசமம்

# அர்ஜூன் மகேந்திரனைக் கண்டுபிடிப்பது எமது அலுவலகத்தின் வேலையல்ல!

### காணாமல் போனோர் அலுவலக உறுப்பினர் விசனம்

(கொழும்பு)

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது காணாமலாக்கப்பட்டதாகக் கூறப்படும் நபர்களை கண்டுபிடிப்பதே காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் பிரதான நோக்கம். அதனை விடுத்து, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரனை கண்டுபிடிப்பது அல்ல” என காணாமல் போனோர் அலுவலக உறுப்பினர் விசாக தர்மதாஷ தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகள் அரசியல் நோக்கங்களை மையப்படுத்தி காணாமல்போனோர் அலுவலகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அரசியல் நோக்கங்கள் இன்றி சுயாதீன ஆணைக்குழுவாகவே காணாமல் போனோர் அலுவலகம் செயற்பட்டு வருகின்றது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது காணாமல் போயுள்ளதாக கூறப்படும் வடக்கு-கிழக்கு மக்களின் உறவுகள், மற்றும் விடுதலைப் புலிகளின் தரப்பினர்கள், இராணுவத்தினர் தொடர்பில் உண்மையான சம்பவங்கள் இது வரை காலமும் அறியாமலே காணப்படுகின்றது. பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்து பல போராட்டங்களை மேற்கொண்டதன் பயனாக காணாமல் போனோர் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டது.

காணாமல் போனவர்களை கண்டுபிடிப்பது அரசாங்கத்தின் நோக்கமாகவே காணப்பட்டது. கடந்த அரசாங்கம் இவ்விடயம் தொடர்பில் ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆனால், ஆட்சி மாற்றத்தின் பின்னர் தேசிய அரசாங்கம் இவ்விடயத்திற்கு சட்டமூலம் அமைத்து சட்டபூர்வமாக காணாமல் போனோர் அலுவலகத்தினை நிறுவியது.

அரசியலில் இருந்து அப்பாற்பட்டு செயற்பட வேண்டும் என்ற விடயத்தினை கருத்திற் கொண்டே அலுவலகம் செயற்பட்டு வருகின்றது. ஆனால், சில அரசியல் தரப்பினர் தமது விடயங்களை நிறைவேற்றிக் கொள்ளவும், அரசாங்கத்திற்கு அழுத்தங்களை ஏற்படுத்தவும், காணாமல் போனோர் அலுவலகத்தின் கொள்கைகளுக்கு முரணாகச் செயற்பட்டு வருகின்றனர்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திரனை கண்டு பிடித்து தருமாறு பிவிதுரு ஹெல உறுமய மனு தாக்கல் செய்துள்ளது. இவ்விடயம் காணாமல் போனோர் அலுவலகத்தின் நோக்கத்தினை திசை திருப்புவதாகவே காணப்படுகின்றது. யுத்தத்தில் காணாமல் போனவர்களை கண்டுபிடித்து அவர்களை அவர்களது உறவுகளிடம் ஒப்படைப்பதே இந்த அலுவலகத்தின் நோக்கமே தவிர, அர்ஜூன் மகேந்திரனை கண்டுபிடிப்பது அல்ல. ஆகவே, அரசியல்வாதிகள் அரசியல் நிலைப்பாட்டில் இருந்து கொண்டு அரசாங்கத்திற்கு அழுத்தங்களை ஏற்படுத்தும் நோக்கில் காணாமல் போனோர் அலுவலக செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம்.

தற்போது காணாமல் போனோர் அலுவலகத்தின் செயற்திட்டங்கள் நாடு தழுவிய ரீதியில் இடம் பெற்று வருகின்றது. மக்கள் காணாமல் போனோர் அலுவலகம் தொடர்பில் வெளிவரும் பொய்யான தகவல்களை ஏற்க வேண்டாம். ஆணைக்குழுவின் செயற்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி உதவி வழங்க வேண்டும்.” என தெரிவித்தார். (இ-7)

# நிஸங்க சேனாதிபதியின் மனு 19 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டது

(கொழும்பு)

இரகசியப் பொலிஸாரால், தான் கைது செய்யப்படுவதை தடை செய்து உத்தரவிடுமாறு கோரி அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸங்க சேனாதிபதி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

அந்த மனு நேற்று புவனேக அலுவிஹார, விஜித் மலல்கொட மற்றும் நலின் பெரேரா ஆகிய மூன்று நீதிபதிகள் குழு முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காலி துறைமுகத்தில் மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலையை நடத்திச் சென்ற சம்பவத்தில் தன்னை கைது செய்து விளக்கமறியலில் வைப்பதற்கு இரகசியப் பொலிஸார் முயற்சிப்பதாக நிஸங்க சேனாதிபதி தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தனிமைப்படுவது குறித்து ஜனாதிபதி பயப்படவில்லை

### ரணில் எதிர்ப்புக் குழு தகவல்



(கொழும்பு)

தேசிய அரசாங்கத்திலிருந்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விலகுவதால், தான் தனிமைப்படுத்தப்படுவது குறித்து அச்சப்படவில்லையென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கட்சி உறுப்பினர்களிடம் திட்டவட்டமாகத் தெரிவித்தாரென, சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட அணி தெரிவித்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சுதந்திர ஊடகமையத்தில், நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த, அந்த அணியின் முன்னாள் அமைச்சர் தயாசிறி ஜயசேகர, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய அரசாங்கத்திலிருந்து விலகினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனிமைப்படுத்தப்படுவாரெனக் கூறிக்கொண்டு, சு.கவினர் தொடர்ந்து அரசாங்கத்தின் அமைச்சுப் பதவிகளைத்தக்கவைத்துக்கொள்ள முயல்கின்றனரென குற்றஞ்சாட்டினார்.

எனினும், தேசிய அரசாங்கத்திலிருந்து சு.க விலகினாலும், தான் தொடர்ந்து ஜனாதிபதியாக அரசாங்கத்தைக் கொண்டு செல்வதாக, ஜனாதிபதி எடுத்துரைத்திருக்கிறார். ஆகவே, ஜனாதிபதியைக் காரணங்காட்டி, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு முட்டுக் கொடுக்காமல், உடனடியாக அரசாங்கத்திலிருந்து சுதந்திரக்கட்சி விலக வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார். (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

**எண் 1 (சூரியன்)**
**(ஆளும் வேந்தர்கள்)**

தெய்வ பலமிருந்தால் தப்புவார்கள். ஆபத்துக்கள் வந்தாலும் ஆன்மிக ஈடுபாட்டினால் தப்பி மீண்டும் வந்து விடுவார்கள். பல தொழில் செய்து பெரும் பணம் ஈட்டுவார்கள். நண்பர்கள் மற்றும் பெண்களிடம் மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். இவர்கள் சில ஆபத்துக்களைத் திடீர் திடீரென்று நிகழ்த்துவார்கள். மனம் தீவிர மனப்பான்மையுடையது. தீவிரவாதம் குறுக்கிடும். ஆன்மிகம் அதிக தொந்தரவுகளைக் குறைக்கும்.

**பெயர் எண் 127**

தொழில் மேன்மை, அதிகாரமிக்க பதவி, வசதியான வாழ்க்கையுண்டாகும். வீடு வண்டி, வாகனம், பொருள் திருப்திகரமாகவே அமையும். காரியம் சாதிப்பதில் கெட்டிக்காரர்கள். நல்ல நண்பர்கள் பலர் இவருக்குத் துணைநிற்பார்கள். செல்வமும் செல்வாக்கும் கூடிக்கொண்டுதான் இருக்கும். தீய எண்ணம், பழக்கவழக்கங்கள் இல்லை என்றால் பணம், பதவி, புகழ் அனைத்து சுகபோகங்களும் வந்து சேரும். தெய்வ அனுகூலம் உண்டு. நல்ல ஆஸ்திமிக்க வாழ்க்கை அமையும்.

**பெயர் எண் 136**


அடிக்கடி வெளியூர், வெளிநாட்டுப்பயணங்கள் மேற்கொள்வார்கள். தொழிலை விருத்தி செய்ய வெளிநாட்டினர் உதவுவார்கள். அடிக்கடி சுற்றுப்பயணம் மேற்கொள்வார்கள். ஏற்றுமதி, இறக்குமதித் தொழில் செய்து பெரும் பணம் சம்பாதிப்பார்கள். சுவையான உணவு உண்பார்கள். மனித சக்திகளுக்கு அப்பாற்பட்ட சக்திகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வார்கள். மந்திரம் மற்றும் மனோ சக்தி பலிதமாகும்.

**பெயர் எண் 145**

பரிபூரண காரிய சித்தியுண்டாகும். சந்தர்ப்ப சூழ்நிலைகளை சரியாகக் கணக்கிட்டு வெற்றி பெறச் செய்யும். பிறரால் தேடப்பட்ட சொத்துக்கள் கிடைக்கும். ஆண், பெண் இருபாலாராலும் பெருத்த வருமானம் கிடைக்கும். ஆடம்பரப்பிரியர்கள். திடமான மன நிலை இருக்கும். அடுத்த நபர்களுக்கு கீழ்ப்படிய மாட்டார்கள். சுகபோக வாழ்க்கையுண்டாகும்.

**எழுத்துக்களின் குணாதிசயங்கள்**
**சூரியாதிக்க எழுத்துக்கள்**
**A,I,J,Q,Y**

A- அற்புதமான பல சக்திகள் அடங்கியுள்ள எழுத்தாகும். மற்றைய எழுத்துக்கள் உடன் சேர்ந்து வரும் போது மேலான நிலைக்கு உயர்த்திக் கொண்டு செல்லும் கீழ் நிலைக்கு வரவிடாது தடுக்கும். எதையும் ஒன்று சேர்க்கும் குணமே தவிர, பிரிக்கின்ற அடிக்கின்ற குணம் இல்லை. முதல் எழுத்தாக வரும் போது அபாரசக்தி குடிகொள்ளும். அனைவரையும் அடக்கியாளும் நிர்வாக சக்தி வாய்ந்தது.




மிகவும் உயர்ந்த எண்ணங்களைத் தோற்றுவிக்கும் தாராள குணமிருக்கும். புதுப்புது யோசனைகள் மனதில் உதயமாகும். நிர்வாக சக்தி அபரிமிதமாக வெளிப்படும். மூளை பலமிக்கவர்கள். உள்ளத்தை தூய்மைப்படுத்தும். ஆக்கும் சக்தி நிறைந்தது. பெயரிலோ, தொழில் பெயரிலோ திரும்பத் திரும்ப வருவது பெருத்த வளர்ச்சியைக் கொடுக்கும் சூரியனைப் போல பிரகாசிக்கச் செய்யும். ஒரு போதும் தீமைகள் செய்யாது. கலைகளில் ஆர்வமிருக்கும். தீவிரமான புத்தி பலமுடையவர்கள். தலைமைப்பதவி கிடைக்கும். சாதனையாளராக மாற்றும். சர்வவல்லமை படைத்தது.

புகழ், செல்வம், மேன்மை பெற்று நேர்மையுடன் வாழச் செய்யும் குறுகிய காலத்தில் மிகப் பெரிய பிரபலஸ்தர்களாக்கும். பிரமிடு போல கூம்பாக சிகரம் போன்று இருப்பதால் எப்போதும் உயிர்ப்புடன் விழிப்பாக இருக்கச் செய்யும். இந்த எழுத்தை தொழில் பெயரில், தொழில் வசியத்தில் (அதிர்ஷ்ட தொழில் வசிய சின்னம்) முறையாகப் பயன்படுத்தி வெற்றி மேல் வெற்றிகளைக் குவிக்கலாம். தொழில் உலக அரங்கில் பேசப்படும் மிகவும் சிறந்த எழுத்தாகும்.

I-விடாமுயற்சியும் துணிச்சலும் தான் இவ் எழுத்தின் தனித்தன்மை. உணர்ச்சிபூர்வமான கருத்துக்களை வெளிப்படையாகச் செய்யும். நிர்வாக சக்தி, அடக்கியாளும் குணம் அதிகம் காணப்படும். பிறர் மீது அதிகாரம் செலுத்தும். பெயரின் ஆரம்பத்தில் வரும் போது அடக்கியாளும் குணம் அதிகமாகும். தனது எண்ணத்தை பிறருக்கு வெளிப்படுத்தி வெற்றியை அடைவார்கள். சோதனைக் காலத்தில் பலரும் உதவி புரிய விரும்பி வருவார்கள். ஆழமான கருத்துக்களால் எப்பேர்ப்பட்ட காரியத்தையும் வெகு எளிதில் சுலபமாக முடித்து விடுவார்கள். சில சமயங்களில் பெரிதும் குழம்பிப் போவார்கள்.

பெயரின் இறுதியில் இவ்வெழுத்து வரும் போது பணத்தை எளிதாகச் சேர்ப்பார்கள். பணம் சேர்ப்பதே வாழ்வின் குறிக்கோளாக இருக்கும். நிம்மதி என்பது இருக்காது. பெயரில் ஒன்றுக்கு மேல் பல தடவை வரும் போது நரம்பு, தசை, கண் சம்பந்தப்பட்ட நோய்கள் உருவாகும்.

(தொடரும்....)

# 56 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு வேலைத்திட்டங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு நிதியீட்டங்கள் ஊடாக மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் 56.78 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய அபிவிருத்திகளை முன்னேற்றும் வகையில் பல்வேறு வேலைத் திட்டங்கள் கடந்த ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்டன.

தற்போது 56.78 மில்லியன் ரூபா செலவில் வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதாவது, மாகாணகுறித் தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் ஆறு வகையான திட்டங்கள் 29.60 மில்லியன் ரூபா செலவிலும் ஓநார் திட்டத்தின் கீழ் 26.98 மில்லியன் ரூபா செல விலும் சீ.வீ.ஜீ திட் டத்தின் கீழ் 0.20 மில்லியன் ரூபா செலவிலான வேலைத் திட்டங்களும் என இவ்வாண்டு பதினான்கு வகையான திட்டங்கள் ஊடாக 43 வேலைத் திட்டங்கள் 56.78 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட விவசாயத் திணைக்களத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# நாட்டை ஆள்வது ஆணா பெண்ணா?

## ரி.பி.எம்.பி.கேள்வி



(கொழும்பு)

ஆண்களும் இல்லாத பெண்களும் இல்லாத ஒரு பிரிவினர் நாட்டை ஆட்சி செய்வதே நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கு காரணம் என முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான டி.பி. ஏக்கநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் டி எஸ்.சேனாநாயக்க, பண்டாரநாயக்க, ஜே.ஆர்.பிரேமதாஸ, மகிந்த ராஜபக்ஷ என ஆண்களும் சிறிமாவோ பண்டாரநாயக்க, சந்திரிகா என பெண்களும் நாட்டை ஆட்சி செய்தார்கள். ஆனால் தற்போது ஆண்களும் அல்லாத பெண்களும் அல்லாத ஒரு பிரிவினர் நாட்டை ஆட்சி செய்வதால் நாடு பல சிக்கல்களுக்கு முகம் கொடுத்துள்ளது என அவர் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# மாற்றுத்திறனாளிகள் சங்க புதிய நிர்வாகத் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாற்றுத் திறனாளிகள் சங்கத்தின் புதிய நிர்வாகத்தெரிவு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

முற்பகல் பத்து மணிக்கு மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில் மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளரின் தலைமையில் இடம்பெற்றது.

இரு குழுக்களுக்கிடையே பல்வேறு வாதப் பிரதிவாதங்களை கடந்து வாக்கெடுப்பின் மூலம் புதிய தலைவராக முன்னாள் அரசியல் துறை போராளியான சரவணனும் தெரிவு செய்யப்பட்டார். தலைவர் தெரிவுக்காக ஏற்கனவே சங்கத்தில் தலைவராக இருந்த சிவமாறனும், சரவணனும் முன் மொழியப்பட்டனர். இதனால் தலைவர் தெரிவு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன் போது சரவணனுக்கு 31 வாக்குகளும் சிவமாறனுக்கு 17 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

தொடர்ந்து ஏனைய தெரிவுகளும் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் மாவட்ட மற்றும் பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர்களும் கலந்து கொண்டனர். (2)

### நீதிமன்ற உத்தரவை மீறி

# சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகத்தின் அனுமதிப்பத்திரம் இரத்து

(மல்லாவி)

மல்லாவி பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் உள்ள மல்லாவி நகரப் பகுதியில் நீதிமன்றத்தின் உத்தரவை மீறி சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வந்த உணவகம் ஒன்றினை மூடி அதன் வியாபார அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்யுமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி செல்வநாயகம் - லெனின்குமார் உத்தரவு பிறப்பித்துள்ளதாக மல்லாவி பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் தினேஷ் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணை கடந்த 6 ஆம் திகதி புதன் கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் அமர்வுகள் துணுக்காய் சுற்றுலா நீதிமன்றத்தில் நடை பெற்ற போதே நீதிபதியினால் இத்தீர்ப்பு வழுங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

மல்லாவி நகரப் பகுதியில் சுகாதார விதிமுறைகளை மீறி இயங்கி வந்த உணவகம் ஒன்றினை மல்லாவி பொது சுகாதார பரிசோதகர் தலைமையிலான சுகாதார அதிகாரிகள் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளைமேற்கொண்ட போது சுகாதார விதி முறைகளை மீறி செயற்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டு துணுக்காய் சுற்றுலா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், நீதிபதியினால் உணவகத்தினை மூடி அதன் வியாபார அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்யுமாறு பணிக்கப்பட்டிருந்த உத்தரவை நீதிபதியிடம் உரிமையாளர் விடுத்த கோரிக்கையையடுத்து உணவகம் நடைபெற்ற வர்த்தக நிலையத்தில் பல்பொருள் வியாபாரத்தை மேற்கொள்ள நீதிமன்றத்தினால் மனிதாபிமான ரீதியாக அனுமதிக்கப்பட்டிருந்தது.

இந்த நீதிமன்ற உத்தரவை உதாசீனம் செய்யும் வகையில் உணவகத்தின் உரிமையாளர் மீண்டும் உணவகத்தை ஆரம்பித்து சுகாதார சட்ட விதிகளை மீறி செயற்பட்டு வந்த நிலையில், மல்லாவி பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையிலான சுகாதார அதிகாரிகள் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு துணுக்காய் சுற்றுலா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போதே நீதிபதியினால் உணவகத்தை மூடிவிடுமாறும், அதன் வியாபார அனுமதியை இரத்துச் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். (2-15)

# லிந்துலை நகரசபை உறுப்பினரின் வீட்டிலிருந்து 11 வயது சிறுவன் மீட்பு

(கொழும்பு)

அக்கரப்பத்தனை -போட்மோர் தோட்டத்தைச் சேர்ந்த ஐந்து வயது சிறுமியை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தலவாக்கலை - லிந்துலை நகரசபையின் உறுப்பினர் இசார மன்சநாயக்கவின் வீட்டிலிருந்து, மற்றுமொரு சிறுவன் மீட்கப்பட்டுள்ளான்.

விதுர்ஷன் என்ற 11 வயது சிறுவனையே, நுவரெலியா பொலிஸார், நேற்று முன்தினம் மீட்டுள்ளனர். இச்சிறுவனின் தாய், குறித்த உறுப்பினரின் வீட்டில், கடந்த எட்டு வருடங்களாகப் பணிபுரிந்து வருபவரென்றும், விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மேலும், இச்சிறுவனுக்குப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லையென்றும், விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைவாக, நுவரெலியாவிலுள்ள சிறுவர் பாதுகாப்பு நிலையத்தில், சிறுவன் ஒப்படைக்கப்பட்டுள்ளான்.


அக்கரப்பத்தனை -போட்மோர் தோட்டத்தைச் சேர்ந்த ஐந்து வயது (தற் போது வயது 6) சிறுமியின் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில், தலவாக்கலை-லிந்துலை நகரசபையின் தலைவர்., உறுப்பினர் இசார மன்சநாயக்க உள்ளிட்ட எண்மர் கைது செய்யப்பட்டு, எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1437

Search for people, places and things | Nagendram Home

## ஐங்கரன்

தாயின் அன்பை விட சிறந்த அன்பும் இல்லை



தந்தையின் அரவணைப்பை விடச் சிறந்த அரவணைப்பும் இல்லை

## ஜெயராஜ்


வாழ்க்கையில் கற்றுக்கொள்வதை நிறுத்தி விடாதீர்கள்



ஏனெனில் வாழ்க்கை கற்றுத் தருவதை நிறுத்தப் போவதில்லை

## பானுஜன்

மழலைகளிடம் தோற்றுப்போகும் போது ஏற்படும் சந்தோஷத்தை



எதிரிகளிடம் பெறும் வெற்றிகள்கூடத் தந்துவிடுவதில்லை

## ஐஸ்வர்யா

முதியோர் இல்லத்தையும் அநாதை இல்லத்தையும் ஒன்றாகச் சேர்த்து விடுங்கள்



தாத்தா பாட்டியும் பேரக்குழந்தைகளும் மகிழ்ச்சியாய் இருக்கட்டும்!

## ஜெயசுதா

கால் நனையாமல் கடல் கடந்தவர்கள் உண்டு. ஆனால் கண் நனையாமல் வாழ்க்கையைக் கடந்தவர்கள் இல்லை



## பானுசா

பறவை உயிருடன் இருக்கும் போது அது எறும்பை சாப்பிடுகிறது



பறவை இறந்த பின் அதை எறும்பு சாப்பிடுகிறது. நேரமும் சூழ்நிலையும் எந்நேரமும் மாறலாம்..!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் தீமைகள் தொடர்பான விழிப்புணர்வு திட்டம்



(யாழ்ப்பாணம்)

பேண்தகு நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில்போதைப் பொருள்பாவனை,புகைத்தல் பொருள் பாவனையை குறைத்தல் தொடர்பான செயற்றிட்டம் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முதல்வர் சி.இந்திரகுமார் தலைமையில் கல்லூரியின் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மானிப்பாய் பொலிஸ் அத்தியட்சகர் கலந்துகொண்டு போதைப்பொருள் பாவனை மாணவர்களிடையே ஏற்படுத்துகின்ற தாக்கம் தொடர்பாக குறிப்பிட்டதுடன் அவற்றில் இருந்து மாணவர்கள் தம்மைப் பாதுகாத்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூகசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்மினி-ரஜீவன் வளவாளராகக் கலந்துகொண்டு போதைப்பொருள் பாவனை மூலம் குடும்பத்தில் ஏற்படுகின்ற பாதிப்பு,பெண்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் போன்றவற்றினை உதாரணங்கள் மூலம் தனதுரையில் மாணவர்களுக்கு சுட்டிக் காட்டியதுடன், அவற்றிற்கு அடிமையாகிவிடக்கூடாது என வலியுறுத்தினார்.

போதைப்பொருள்பாவனையினால் குடும்பங்களுக்குள் வருகின்ற முரண்பாடுகள், பிள்ளைகள் கல்வியில் எதிர்கொள்கின்ற சிக்கல்கள், கல்வியில் நாட்டமற்று போகின்ற தன்மை, குடும்பத்தில பெற்றோர்கள் இப்பழக்கத்திற்கு அடிமையாகின்றபோது அவற்றைப் பார்த்து பிள்ளைகள் பழகிக்கொள்கின்ற துயர் அப்பழக்கத்தினால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் போன்றவற்றை அளிக்கையின் ஊடாக வெளிப்படுத்தியிருந்தனர்.

இவ்வாற்றுகையில், யே. சானுயன், சு.கலைக்சன், ச.குபேரன், த.டிபேர்டன், த. தனுஜன்,பவிக்சன்,விஸ்வா, பாடகர்களாக துவாரன், வாத்தியக் கலைஞர்களாக யே. யதுசன், டெனிஸ் ஆகியோர் செயற்பட்டனர்.

ஆற்றுகையினை கல்லூரியின் ஆசிரியர் எஸ்.ரி. அருள்குமரன் நெறிப்படுத்தியிருந்தார். (இ-7)

# நெடுந்தீவு நிலையான முகாமைத்துவ அபிவிருத்தி திட்டத்தில் தென்னைப்பயிர்ச்செய்கை சபையின் வேலைத்திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேசத்தின் நிலையான முகாமைத்துவ அபிவிருத்தித்திட்டம் தொடர்பான விசேட கூட்டம் நேற்று முன்தினம் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் ஜனாதிபதி செயலக அதிகாரிகள், மகாவலி அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் தென்னை பயிர்ச்செய்கை சபையின் பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர்(தென்னம்தோட்ட மற்றும் நாற்றுமேடை அபிவிருத்தி), யாழ் .பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் ஆகியோர்கலந்துகொண்டனர்.

நெடுந்தீவில்தென்னையை அபிவிருத்தி செய்வதற்காக தென்னை பயிர்ச்செய்கை சபையானது கள ஆய்வுகளை மேற்கொண்டு முதல்கட்டமாக 10 ஏக்கர் காணியை தெரிவுசெய்து தென்னம் தோட்டங்கள் அமைத்து அபிவிருத்தி செய்யவும் மிகுதி 100 ஏக்கர் காணியை படிப்படியாக அபிவிருத்தி செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2018 இல் நெடுந்தீவிலுள்ள 7 கற்பகதரு சங்கங்கள் ஊடாக பயனாளிகளை தெரிவு செய்து 7500 தென்னம்பிள்ளைகளை பயிரிட்டு தென்னைச் செய்கையை மேற்கொள்ளவுள்ளதாகவும் தென்னை பயிர்ச்செய்கை சபையினர் தெரிவித்தனர். (இ-7)

# பருவமல்லாத காலங்களில் வலைக்கூடாரங்களில் பயிர்ச்செய்கை



(யாழ்ப்பாணம்)

விவசாயிகள் வழமையாக பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை அந்தந்தப் பயிர்களுக்குரிய பருவ காலங்களிலேயே மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் நவீன விவசாய ஆய்வுகளின் ஊடாக நாட்டின் பல இடங்களில் பருவமல்லாத காலங்களிலும் குறித்த பயிர்களை செய்கைக்குட்படுத்தி நல்ல விளைச்சலைப் பெறுவதுடன் அதிக வருமானத்தையும் ஈட்டி வருகின்றனர்.

எனவே அவ்வாறான பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை வடமாகாண விவசாயிகள் நேரடியாகப் பார்வையிட்டு அந்த முயற்சியில் அவர்களும் ஈடுபட்டு பயனடைவதற்கு ஏதுவாக வடமாகாண விவசாயத் திணைக்களத்தினால் அண்மையில் கண்டி மாவட்டத்திலுள்ள தொலுவ பிரதேசத்திற்கு களவிஜயம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

அக்கள விஜயத்தின் போது பருவமல்லாக் காலங்களில் கூடாரங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளக் கூடிய வலுவுடைய யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த 11 விவசாயிகளும் விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த 11 உத்தியோகத்தர்களும் பங்குபற்றியிருந்தனர்.

இக்கள விஜயத்தின்போது கூடாரப் பயிர்ச் செய்கையின் போது பச்சை வீட்டினுள் வெப்பநிலைசார் ஈரப்பதனைப் பேணுவதற்கு மேற்கொள்ளக்கூடிய நவீன தொழில்நுட்பங்கள், அத்தொழில்நுட்பத்தை பிரயோகிக்க மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர் செயற்பாடுகள் என்பன செய்முறை விளக்கங்களுடன் வழங்கப்பட்டன. (இ-7)

# நுண்கடன் முறைமை முற்றாக தடைசெய்யப்படல் வேண்டும்

## நாடாளுமன்றில் டக்ளஸ் வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே எமது மக்களை வாட்டி, வதைக்கின்ற நுண் கடன் நிதி நிறுவனங்கள் தொடர்பில் இந்த அரசு வலுவுள்ள, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்த விரும்புகின்றேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற நாட்டிலுள்ள நிதி நிறுவனங்கள் தொடர்பாக நிலவுகின்ற பிரச்சினைகள் பற்றிய சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறுதெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கு மக்களுக்கான பொருளாதார உளவியல் யுத்தமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இந்த நுண் கடன் நிதி நிறுவனங்களின் நடவடிக்கைகள் காரணமாக, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நாளாந்தம் தற்கொலைக்கு முயற்சிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுகின்ற பலர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தும் வருகின்றனர்.

இத்தகைய நுண் கடன் நிதி நிறுவனங்கள் தொடர்பில் அரச தரப்பினருக்கு பல்வேறு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையிலும், அரசு இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை இதுவரையில் எடுத்துள்ளதாகத் தெரியவரவில்லை. ஏற்கனவே எமது மக்களின் பணத்தை மோசடி செய்துள்ள நிதி நிறுவனத்தின் மோசடிக்காரர்கள் இத்தகைய நிதி நிறுவனங்களின் பின்னணியில் அல்லது வழிகாட்டிகளாக தற்போதும் இருக்கின்றார்களா? என்பது தெரியாது. சில வேளை அப்படி இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லைஎன்றேகூறவேண்டும்

இத்தகைய நிலையில் இலங்கை மத்திய வங்கியின் 2017ஆம் ஆண்டுக்கான அறிக்கையின் இரண்டாவது பகுதியிலே, வங்கிசாரா நிதி நிறுவனங்கள் மேற்பார்வை எனும் தலைப்பின் கீழ் மொத்தமாக 51 நிதி நிறுவனங்கள் செயற்பாட்டில் இருப்பதாகவும், மேலும் 68 நிதி நிறுவனங்களை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறான அனுமதிகள் வழங்கப்படுகின்ற நிலையில், நுண் கடன் பிரிவுகளின் கட்டளைக்கும், மேற்பார்வைக்குமான திணைக்களம் ஒன்றும் செயற்பாட்டில் இருப்பதாகக்கூறப்படுகின்ற நிலையில், மேற்படி நுண் கடன்நிதி நிறுவனங்களால் எமது மக்கள் தற்கொலைக்கு துணிகின்ற நிலைமைகள் ஏன் ஏற்படுகின்றன? என்ற கேள்வியே எமது மக்கள்முன்பாக எழுந்துள்ளது.

இன்று எமது மக்கள் பொருளாதார வலிமை இழந்தவர்களாக இருக்கின்ற நிலையில், அவர்களால் ஈட்டப்படுகின்ற சொற்பமான நிதிகூட பினான்ஸ், லீசிங், நுண்கடன் வட்டி, வீடமைப்புக் கடன் வட்டி போன்ற பல்வேறு பிரிவுகளால் தென்பகுதி நோக்கியே நகர்த்தப்பட்டு வருகின்றன.

அது போதாமைக்கு பிற மாவட்டங்களிலிருந்து சென்று வடக்கு-கிழக்கு மாகாணங்களின் வளங்கள் சூறையாடப்படுகின்ற நிலைமைகளும் இல்லாமல் இல்லை. பல்வேறு தொழில்சார் இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன.

எனவே, வடக்கு- கிழக்கு மாகாணங்களிலே எமது மக்களை வாட்டி, வதைக்கின்ற மேற்படி நுண்கடன் நிதி நிறுவனங்கள் தொடர்பில் இந்த அரசு வலுவுள்ள, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என, வலியுறுத்த விரும்புகின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

### கடனுக்கு கடன் பரிகாரமாகாது

நுண் கடன் சுமைகளிலிருந்து எமது மக்கள் விடுபடுவதற்கு அரச இலகு கடன் திட்டங்களை அறிமுகப்படுத்துவது என்பது அதற்கு ஒரு போதும் உரிய தீர்வாகாது. எமது மக்களை தற்போதுள்ள கடன்சுமையிலிருந்து மீட்க என இன்னுமொரு கடன்திட்டத்தினை அறிமுகம் செய்வதானது எமது மக்களை மீண்டும் படுகுழியில் தள்ளிவிடும் செயலாகும்.

எனவே, முதலில் மேற்படி நுண்கடன் நிதி நிறுவனங்கள் குறித்து உடனடி ஆய்வுகளை மேற்கொண்டு, நியாயமற்ற வட்டி வீதங்களை ஒதுக்கிடவும், முறையற்ற வகையிலான கடன்கள் வழங்கப்பட்டிருப்பின் அவற்றை இரத்துச் செய்திடவும், அவரவர் பெற்ற கடன்களை அவரவர்வசதிக்கேற்ப தவணை முறையில் திருப்பிச் செலுத்துவதற்கு ஒரு காலஅவகாசமும் வழங்கிட முன்வர வேண்டும். மேற்படி கடன்களில் பல வலுக்கட்டாயமாக எமது மக்கள் மத்தியில் திணிக்கப்பட்டிருப்பதால் இத்தகைய ஏற்பாடுகள் அவசியமாகும்.

அதேநேரம், எமது பகுதிகள் கடந்த காலங்களில் அடைந்துள்ள பாதிப்புகளையும், எமது மக்களின் பொருளாதார வீழ்ச்சிநிலைமைகளையும் கருத்தில் கொண்டு, அரசாங்கம் புனர்வாழ்வு அதிகார சபையின் ஊடாக மேற்படி கடன் தொகையை மீளச் செலுத்துவதற்கு ஒரு விசேட ஏற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும்.

அந்த வகையில் எமது மக்கள் மீது வலியப் புகுத்தப்பட்டுள்ள மேற்படி கடன் சுமைகளிலிருந்து எமது மக்கள் மீளுகின்ற நிலையில், எமது மக்களது எதிர்கால வாழ்வு கருதிய வாழ்வாதாரங்களை மேற்கொள்வதற்கு அரசு குறிப்பிடுகின்ற அரச இலகு கடன் முறைமைகளை வழங்குவது ஆரோக்கியமாக அமையும் என்பதைத் தெரிவித்து, எனது இந்த கருத்துக்கள் தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# மனச்சாட்சியின் படி கடமைகளை நிறைவேற்ற அர்ப்பணிப்புடையவர்களாக இருக்க வேண்டும்

## புத்திஜீவிகளுக்கு ஜனாதிபதி அறிவுரை

(கொழும்பு)

மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைசார்ந்த கல்விமான்களும் புத்திஜீவிகளும் நாட்டை விட்டுச் செல்வது இன்று பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாகவும் சட்டதிட்டங்களை விதித்து நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு தடை ஏற்படுத்த அரசாங்கம் தயாராக இல்லை எனினும் இலவசக் கல்வியை பெற்ற குடிமக்கள் என்ற வகையில் மனச்சாட்சியின் படி தாய் நாட்டுக்கான தமது கடமைகளை நிறைவேற்ற அர்ப்பணிப்புடையவர்களாக இருக்க வேண்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.



மேல் மாகாண ஆசிரியர் பரீட்சையில் சித்தியடைந்த 500 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் கொழும்பு தாமரைத்தடாக கலையரங்கில் இடம்பெற்றபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி, கல்விமான்களும் புத்திஜீவிகளும் அதிகமாக வாழும் நாடுகளே துரிதமாக அபிவிருத்தி அடைவதாகவும் நாட்டின் அபிவிருத்தி, பொருளாதார சுபீட்சம் ஆகிய இலக்குகளை அடைய அவர்களது பங்களிப்பு இன்றியமையாததாகும் என்றும் தெரிவித்தார்.

இதனிடையே ஆசிரியர் சேவையில் நிலவும் சில பிரச்சினைகள் தொடர்பாகவும் ஜனாதிபதி அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டினார்.

இலவசக் கல்வியை வழங்குவதற்காக பெருந் தொகை பணத்தை செலவிடுவதுடன், பல்வேறு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவரும் நிலையில் அத்துறையில் காணப்படும் உள்ளக பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஆசிரியர் சேவையில் நிலவும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் கல்வி அமைச்சு ஆகியன ஒன்றிணைந்த வினைத்திறன் மிக்க, விரிவான ஒரு செயற்றிட்டத்தை அமுல்படுத்த வேண்டுமெனவும் சுட்டிக்காட்டினார்.

மேல் மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வர்த்தகம், கலை, விஞ்ஞானம், கணிதம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாட நெறிகளுக்கும் தமிழ்மொழிமூல பட்டதாரிகளுக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

ஆசிரியர் நியமனங்களை வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைக்கும் வகையில் 15 பட்டதாரிகளுக்கு ஜனாதிபதி இதன்போது நியமனக் கடிதங்களை வழங்கினார்.

மேல் மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணயக்கார, முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய, மேல் மாகாண கல்வி அமைச்சர் ரஞ்சித் சோமவங்ச, மாகாண அமைச்சர்கள் காமினி திலக்கசிறி, சுமித்லால் மெண்டிஸ், லலித் வணிகரத்ன மற்றும் மேல் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.ஜி. விஜேவர்தன உள்ளிட்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

# ஷெல் துண்டுகளை சுமந்த வண்ணமே வடக்குப் பெண்கள் வாழ்கின்றனர்

## அமைச்சர் அனந்தி கவலை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கான மாற்றுத்திறனாளிகளை யுத்தம் தோற்றுவித்துள்ளது. யுத்தத்தினை மேற்கொண்ட அரசு அவர்களின் நலன் மற்றும் உரிமைகள் சார்ந்து ஆழமாக சிந்திக்க வேண்டும். இல்லையேல் காலப்போக்கில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என வடமாகாண மகளிர் விவகாரம் சமூக சேவைகள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.



வடமாகாண மாற்றுத்திறனாளிகளுக்கென கொள்கை வரைவு தயாரிக்கும் நிகழ்வு அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் தொடர்ந்து பேசுகையில், சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையை விட இம் மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அதிகம். போரின் காரணமாக மீள எழும்ப முடியாதவர்களாகவும் அவர்களுடைய குடும்பங்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப முடியாததாகவும் வறுமை அதிகரித்த வண்ணமே சென்று கொண்டிருக்கிறது.

பல மாணவர்கள், பெண்கள் இன்று தம் அவயவங்களில் ஷெல் துண்டுகளை சுமந்த வண்ணம் நடமாடிக் கொண்டிருக்கின்றார்கள். இது பிற்காலங்களில் பல பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது. இது பற்றி அரசாங்கம் சிந்திக்கவில்லை. சுருக்கமாக யுத்தம் என்ற ஒன்றை வெற்றிகரமாக முடித்து, உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து விட்டோம் என்று சாதாரணமாகக் கூறுகின்றது.

இதனால் ஏற்பட்ட விளைவுகளை, இனி ஏற்படப்போகும் விளைவுகளை சிந்திக்கவில்லை. இக் கொடூர யுத்தம் எம் இனத்தின் வீரியத்தை, எம் சந்ததியின் உரிமைகளை மற்றும் வளர்ச்சியை நசுக்கியுள்ளது. இவையெல்லாம் ஆராயப்பட வேண்டும்.

வடமாகாணத்திற்கென தனித்துவமான திட்டங்கள் வகுக்கப்படவில்லை. உதவிகள் வழங்கப்படவில்லை. அரசாங்கத்தின் இச் செயல் வேதனையளிக்கிறது. ஏனெனில் பிற மாகாணங்களுடன் இவர்களுடைய பிரச்சினைகளை ஒப்பிடமுடியாது.

யுத்தத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் வட மாகாணத்திலேயே உள்ளனர். ஆயினும் தமக்குரிய தீர்வுகள் எட்டாத நிலையிலும் கூட மாற்றுத்திறனாளிகள் ஓர் தொழிலைச் செய்வோம் எனும் தமது சுய முயற்சி உண்மையிலேயே போற்றக்கூடியது.

எடுத்துக்காட்டாக சாதாரணமாக இயங்கக்கூடிய மாற்றுத்திறனாளிகள் தமது சுய முயற்சியிலீடுபடவாகன அனுமதிப் பத்திரத்தைப் பெற முடியாமலிருக்கின்றனர். இது தொடர்பாக பலரிடம் எடுத்துக் கூறியும் இன்றுவரை மறுக்கப்பட்ட உரிமையாகவே காணப்படுகிறது. அது மட்டுமன்றி மாற்றுத்திறனாளிகளின் காணிகளில் இராணுவம் நிலைகொண்டுள்ளது. அது அவர்களது வாழ்வாதாரத்தை பெரிதும் பாதிக்கின்றது. அவர்களுக்கு வழங்கக்கூடிய 3000ரூபா கொடுப்பனவுகள் கூட 3000 பேருக்கே வழங்கப்படுகிறது.

அக் கொடுப்பனவு அவர்களுடைய அன்றாட வாழ்க்கைச் செலவுக்கு போதாத நிலையிலும் இவ் அரசினால் தகுதியான எல்லோருக்கும் வழங்க முடியாதிருப்பது அவர்கள் நலன் சார்ந்து இவ் அரசு யோசிக்கவில்லை என்ற ஐயத்தை தோற்றுவித்துள்ளது. ஆனால் நிலைமாறுநீதி என்றெல்லாம் கவர்ச்சிகரமாக பேசுகின்றதை விடுத்து மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளை, திட்டங்களை இப் பகுதியில் நடைமுறைப்படுத்த அரசு முன்வர வேண்டும்.

பாராளுமன்றத்தில் மாற்றுத்திறனாளிகளின் நலன் மற்றும் உரிமைகள் சார்ந்து இத் துறைசார்ந்த அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரேரணைகள் கொண்டுவரப்பட வேண்டும்.

வடமாகாண மாற்றுத்திறனாளிகள் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள இக் கொள்கையானது எதிர்காலங்களில் வலுவுள்ளதாக விளங்கும். இது வடமாகாணத்திற்கென தனித்துவமான ஓர் மைல்கல்லாகும். இவர்களது பிரச்சினைகள், தேவைகள் மற்றும் உரிமைகளை வெளிப்படுத்தும் வகையில் பல திணைக்களங்களினது கருத்துக்களை ஆழமாக உள்வாங்கி குறுகிய காலத்தில் வெளியிடப்பட்டிருக்கும் இக் கொள்கை இதன் உருவாக்கத்தில் துணைபுரிந்த அனைவரது கடின உழைப்பும் பாராட்டப்படத்தக்கதாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## அதிவேக நெடுஞ்சாலையில் திடீரென தீப்பற்றிய லொறி



(கொழும்பு)

தெற்குக்கான அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்துக்கொண்டிருந்த லொறியொன்று, நேற்று பிற்பகல் 12.10 மணியளவில் தீப்பிடித்து எரிந்தது. கடவத்தையிலிருந்து மாத்தறை நோக்கி, ஆடைகளை ஏற்றிச்சென்ற லொறியொன்றே, இவ்வாறு தீப்பற்றியுள்ளதென, பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. சம்பவத்தில், லொறியில் பயணித்த எவருக்கும் எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லையெனத் தெரிவித்த பொலிஸார், கெலனிகம நுழைவாயில் பொலிஸார், தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். (இ-7)

## விபத்தில் கணவன்,மனைவி காயம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-நாவற்குழி பகுதியில் கடந்த புதன்கிழமை மதியம் பெக்கோ கனரக வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவன், மனைவி காயமடைந்துள்ளனர். காயமடைந்த இருவரும் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கணவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். வடமராட்சி-கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த 31வயது நாகசீலன் கொலின் யூட், (வயது-29) கொலின் யூட் அனுசிகா ஆகியோரே சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-7)

## அவசரமாக மூடப்பட்ட ருகுணு பல்கலைக்கழக மாபலான விவசாய பீடம்

(கொழும்பு)

வைரஸ் காய்ச்சல் பரவல் காரணமாக ருகுணு பல்கலைக்கழகத்தின் மாபலான விவசாய பீடம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் காமினி சேனாநாயக்க தெரிவித்துள்ளார். கடந்த சில நாட்களாக குறித்த வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுமார் 100 மாணவர்கள் வரையில் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-7)

## விமான சேவை இடைநிறுத்தம்

(கொழும்பு)

மத்தள விமான நிலையத்துக்கு தினம்தோறும் வருகைதந்த பிளைய் டுபாய் பயணிகள் விமான சேவையை நேற்று முதல் நவம்பர் மாதம் வரை இடைநிறுத்த, மத்தள விமான நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது. குறித்த பயணிகள் விமான சேவையானது தினந்தோறும் காலை இடம்பெற்றது. இறுதியாக நேற்று முன்தினம் வரை இந்த பயணிகள் விமான சேவை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கோப் குழுவின் தலைவராக ஹந்துன்நெத்தி மீள தெரிவு

(கொழும்பு)

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்) தலைவராக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இராஜாங்க அமைச்சர் ஹர்ஷ டி சில்வா இந்த விடயத்தை தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். (இ-7)




# புத்திசாதுரியமாகச் செயற்பட்டால் வெற்றி நிச்சயம்



குன்றத்தூர் கிராமத்தை சேர்ந்தவர்கள் நாகராஜன், நல்லமுத்து இருவரும் வியாபாரிகள். நெருங்கிய நண்பர்களும் கூட்டிணைந்தே வியாபாரத்துக்கு செல்வர்.

ஒரு நாள், வியாபாரப் பொருட்களுடன் பக்கத்து ஊர் சந்தைக்குச் சென்றனர். நல்ல இலாபம் கிடைத்தது.

ஊர் திரும்பிக்கொண்டிருந்தனர். அப்போது, "நம் கையில், ஏராளமான பணம் உள்ளது. இரவு நேரத்தில் பயணம் செய்வது ஆபத்தானது" என்றான் நல்லமுத்து.

"சரி தான்...என்ன செய்யலாம்..." என்றான் நாகராஜன். "அதோ தெரிகிறதே... அந்த ஆலமரத்தடியில் குழி தோண்டி பணத்தை புதைத்து விடுவோம். நாளைக் காலை வந்து எடுத்துக் கொள்ளலாம்" என்றான்.

ஒப்புக் கொண்டான் நாகராஜன். பணத்தை ஒரு பையில் போட்டு ஆலமரத்தடியில் புதைத்தனர்.

மறுநாள் இருவரும் அங்கே வந்தனர். புதைத்த இடத்தில் பணத்தைக் காணவில்லை என்று புலம்பிய நாகராஜன், "நாம் பேசியதை திருடன் கேட்டு கொள்ளையடித்துச் சென்று விட்டான்..." என்றான்.

"நண்பனே...அடுத்த முறை சந்தைக்குச் சென்று வரும் போது பணத்தை இதே இடத்தில் புதைத்து வைப்போம். கண்காணித்து திருடுபவனை பிடித்து விடலாம்..." என்றான் நல்லமுத்து.

அதற்கு மறுத்தான் நாகராஜன். "வேண்டாம்... ஏற்கனவே பணத்தை இழந்து விட்டோம். மீண்டும் ஒரு முறை தெரிந்தே இழக்க வேண்டுமா..." என்று கேட்டான்.

மறுமுறை சந்தையில் இருந்து திரும்பிய போது, "நாகராஜா... உன் பணத்தையும்கொடுமுன்புபோலவே புதைத்து வைப்போம்..." என்றான் நல்லமுத்து. தயங்கினான் நாகராஜன்.

"இந்த முறை நாம் திருடனை கண்டுபிடித்து விடலாம் தயங்காதே..." என்று பணத்தை வாங்கி, ஒரு பையில் போட்டு, குழி தோண்டி புதைத்து வைத்தான்.

மறுநாள் புதைத்த இடத்தில்தோண்டிப் பார்த்தனர். பணத்தை காணவில்லை.

புலம்பிய நாகராஜன், "நான்தான்சொன்னேனே... ஏற்கனவே பணத்தை இழந்து விட்டோம். மீண்டும் இழக்க வேண்டாமென்று.நீ தான் கேட்கவில்லை..." என்றான்.

"நாகராஜா... யார்திருடன் என்பதை இப்போ கண்டு பிடித்து விடலாம்..."

"எப்படி..."

"பணம் வைத்திருந்த பையில், சிறிய ஓட்டை போட்டிருந்தேன். ஒருவித மாவை, அந்த பையில் நிரப் பியிருந் தேன். பையின் ஓட்டை வழியே மாவு சிந்தி, திருடன் வீடு வரை கோடு போட்டிருக்கும். அதைப் பின் தொடர்ந்து சென்றால் திருடன் வீட்டைக் கண்டுபிடித்து விடலாம்..."

மாவுக் கோட்டை பின் தொடர்ந்தனர். ஒரு வீட்டின் முன் முடிந்தது. அந்த வீட்டில் இருந்த திருடனை பிடித்து பொலிஸில் ஒப்படைத்து பணத்தை திரும்பப் பெற்றனர். நல்ல முத்துவின் சாதுர்யத்தை பாராட்டினான் நாகராஜன்.

குட்டீஸ்... பிரச்சினை வந்தவுடன், "இப்படி செஞ்சிட்டோமே..." என புலம்பி அழுது உடைஞ்சி போகக் கூடாது. அதிலிருந்துவெளியே வருவதற்கான வழியை யோசிச்சா, நல்லமுத்துவை போல நீங்களும் வெற்றி பெறலாம்.




❖1873-இரு வாரங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்ட லண்டன் அலெக்சாந்திரா அரண்மனை தீயினால் அழிந்தது.

❖1903-அநுராதபுரத்தில் இடம்பெற்ற கலவரத்தில் கத்தோலிக்க ஆலயம் ஒன்று பௌத்தர்களினால் சேதமாக்கப்பட்டு மதகுரு தாக்கப்பட்டார்.

❖1934-வால்ட் டிஸ்னியின் டொனால்ட்டக் வரை கதை வெளிவந்தது.

❖1944-இரண்டாம் உலகப் போர்: சோவியத் ஒன்றியம் கிழக்கு கரேலியாவினுள் ஊடுருவியது.

**பிறப்புகள்**

❖1672-முதலாம் பீட்டர், உருசியப் பேரரசர் (இ. 1725)

❖1781-ஜார்ஜ் ஸ்டீபென்சன், ஆங்கிலேயப் பொறியியலாளர், நீராவிப் பொறியைக் கண்டுபிடித்தவர் (இ. 1848)

❖1917-எரிக் ஹாப்ஸ்பாம், எகிப்திய-ஆங்கிலேய வரலாற்றாளர் (இ. 2012)

❖1931-நந்தினி சத்பதி, ஒடிசாவின் 8ஆவது முதலமைச்சர் (இ. 2006)

❖1937-இராமச்சந்திர காந்தி, இந்திய மெய்யியல் அறிஞர் (இ. 2007)

❖1943-சி.மௌனகுரு, இலங்கை அரங்க ஆய்வாளர், பயிற்சியாளர், இயக்குநர், கல்வியாளர்

❖1949-கிரண் பேடி, இந்தியக் காவல்துறை அதிகாரி, செயற்பாட்டாளர்

❖1952-யூசுஃப் ரசா கிலானி, பாகிஸ்தான் அரசியல்வாதி

❖1954-எலிசபெத் மே, அமெரிக்க-கனேடிய சுற்றுச் சூழலியளாளர், அரசியல்வாதி

❖1977-அமீஷா பட்டேல், இந்திய நடிகை

❖1985-சோனம் கபூர், இந்திய நடிகை

**இறப்புகள்**

❖68-நீரோ, உரோமப் பேரரசர் (பி. 37)

❖373-சிரியனான எபிரேம், துருக்கிய இறையியலாளர் (பி. 306)

❖1834-வில்லியம் கேரி, ஆங்கிலேய மதப்பரப்புநர் (பி. 1761)

❖1870-சார்லஸ் டிக்கின்ஸ், ஆங்கிலேய எழுத்தாளர் (பி. 1812)

❖1897-ஆல்வன் கிரகாம் கிளார்க், அமெரிக்க வானியலாளர் (பி. 1832)

❖1900-பிர்சா முண்டா, இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி. 1875)

❖1970-எம்.ஐ.எம்.அப்துல் மஜீத், இலங்கை அரசியல்வாதி (பி. 1919)

❖1981-குடந்தை ப.சுந்தரேசனார், தமிழகப் பண்ணாராய்ச்சியாளர் (பி. 1914)

❖1995-கொகினேனி ரங்க நாயுகுலு, இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர், அரசியல்வாதி (பி. 1909)

❖2011-மக்புல்ஃபிதா உசைன், இந்திய ஓவியர், இயக்குநர் (பி. 1915)

❖2013-கே.டி.பிரான்சிஸ், இலங்கைத் துடுப்பாட்ட நடுவர் (பி. 1939)

**சிறப்பு நாள்**

❖சுயாட்சி நாள் (ஓலந்து தீவுகள்)

❖தேசிய வீரர்கள் நாள் (உகாண்டா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 100 | 100 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 85 | 100 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 110 | 160 | 200 | 120 |
| தக்காளி | 120 | 140 | 130 | 160 | 150 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 35 | 40 | 40 | 40 |
| கோவா | 150 | 150 | 60 | 120 | 120 | 80 |
| கரட் | 200 | 400 | 200 | 300 | 320 | 180 |
| பூசணி | 40 | 30 | 25 | 30 | 40 | 40 |
| புடோல் | 100 | 100 | 60 | 100 | 120 | 100 |
| வாழைக்காய் | 60 | 40 | 35 | 40 | 80 | 40 |
| சின்ன வெங்காயம் | 160 | 200 | 100 | 180 | 160 | 130 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 85 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 120 | 200 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 80 | 100 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 60 | 60 | 100 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 | 80 | 120 | 180 |
| லீக்ஸ் | 250 | 400 | 240 | 180 | 320 | 220 |
| பீற்றூட் | 100 | 100 | 60 | 120 | 120 | 100 |
| குறிமிளகாய் | 200 | 200 | 60 | 180 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 250 | 100 | 100 | 140 | 200 | 150 |
| போஞ்சி | 250 | 400 | — | — | 400 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 60 | — | — | 140 | 120 |
| கீரை-1பிடி | 40 | 40 | 30 | 50 | 40 | 50 |
| தேசிக்காய் | 120 | 120 | 150 | 140 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 30-60 | 30-55 | 70 | 50-75 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | — | 200 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 300 | 300 | — | 140 | 240 | 250 |
| முள்ளங்கி | 100 | 100 | 40 | 120 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 30 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 100 | 150 | — | — | 80 | 100 |

உயர்ந்த இடத்தில் இருக்கும்போது
உலகம் உன்னை மதிக்கும்
உன் நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால்
நிழலும் சுட மிதிக்கும் - *கவியரசு கண்ணதாசன்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அரசியலுக்கு வந்தால் ரஜினியும் நடிகர் வடிவேலுதான்

மகாத்மா காந்தி இன்றுவரை மகாத்மாவாகப் போற்றப்படுவதற்கு மூலகாரணம் அவர் அரசியலுக்கு வராமல் இருந்ததுதான்.

பாரத தேசத்துக்கு சுதந்திரம் கிடைத்து முதற்தடவையாக இந்திய நாட்டின் தேசியக் கொடியேற்றப்படும்போது அந்த இடத்தில் மகாத்மா காந்தி இருக்கவில்லை.

எங்கோ ஓர் இடத்தில் நடந்த சிறு கலவரத்தை நிறுத்துவதற்காக அந்த இடத்துக்குக் காந்தி சென்றிருந்தார்.

இந்தியாவின் பிரதமராக வரவேண்டும் என்ற நினைப்பு காந்தியிடம் அறவே இல்லாமல் இருந்ததுதான் அவரை மகாத்மாவாக போற்றுவதற்கு மூலகாரணமாயிற்று.

ஈவேரா பெரியார் தமிழகத்தின் முதலமைச்சராக வர நினைத்திருந்தால், பகுத்தறிவின் தந்தை பெரியார் என்ற போற்றுதல் இல்லாது போயிருக்கும்.

தமிழகத்து மக்களை அறியாமையில் இருந்து மீட்க வேண்டும் என்று பெரியார் நினைத்தாரேயன்றி மக்களின் அறியாமையைத் தனக்குச் சாதகமாக்க வேண்டுமென அவர் ஒருபோதும் நினைத்திருக்கவில்லை.

அதேநேரம் மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி பிழையானவர்கள் அரசியலுக்கு வந்துவிடக் கூடாது என்பதிலும் ஈவேரா பெரியார் உறுதியாக இருந்தார்.

இதனால்தான் அவரை இந்திய தேசம் இன்று வரை பகுத்தறிவின் தந்தையாகப் போற்றுகிறது.

வீர இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்த சுவாமி விவேகானந்தர் தன் துறவு நிலையில் நின்று வழுவாத ஆன்மிக தானத்தை வழங்குவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார்.

அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் சகோதர சகோதரிகளே! என விழித்துரைத்த விவேகானந்தர் நினைத்திருந்தால், அமெரிக்க நாட்டின் பிரஜையாகி அங்கேயே தங்கியிருந்து சுக போகங்களை அனுபவித்திருக்க முடியும்.

ஆனால் தன் வீரத்துறவை எங்கும் நிரூபிக்கின்ற மனத்திடத்தை சுவாமி விவேகானந்தர் கொண்டிருந்ததால் அவரின் வாழ்வும் வார்த்தையும் மனித சமூகத்தை வழிப்படுத்தி நிற்கிறது.

இவ்வாறாக கொண்ட இலட்சியத்தில் உறுதியாக இருப்பவர்கள்தான் மக்கள் சமூகத்தில் போற்றப்படுகின்றனர்.

எனினும் சிலர் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப செய்கைகளை விட்டுவிடுகின்றனர்.

இதில் நடிகர் சுப்பர் ஸ்ரார் ரஜினி காந்தும் ஒருவர் என்பதை சுஹித்தானாக வேண்டும்.

நடிப்புத் துறையில் ரஜினி காந்த் கோலோச்சுவதற்கு அடிப்படைக் காரணம் அவரின் ஆன்மிக சிந்தனைதான்.

நடிகர் சமூகத்தில் இப்படியொரு இல்லற ஞானியா? என்று வியக்கும் அளவில் ரஜினி காந்த் தன்னை வழிப்படுத்தினார்.

ஆனாலும் தன் இலக்கை முழுமைப்படுத்தாமல், மதியத்துக்குப் பின்பாக ரஜினி காந்த் அரசியலை நாடியபோது அவர் மீதான விமர்சனங்கள் அட! ரஜினி காந்துக்கும் இப்படியா என்று கேட்கத் தோன்றும்.

என்ன செய்வது! அரசியலுக்கு வந்துவிட்டால் சுப்பர் ஸ்ரார் ரஜினி காந்தும் நடிகர் வடிவேலுவின் இடத்தில்தான் என்பதை இப்போதாவது உணர்ந்து கொள்வது நல்லது.

# மனிதாபிமானமற்ற பகிடிவதையை ஒழிப்பதற்கு பொது வேலைத்திட்டம் பற்றி சிந்திக்க வேண்டும்

## அனைத்து தரப்பினரிடமும் ஜனாதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் மனிதாபிமான மற்ற பகிடிவதையை ஒழிப்பதற்கு பொறுப்பு வாய்ந்த அனைத்து தரப்பினரும் இணைந்து பொது வேலைத் திட்டம் குறித்து உடனடியாக சிந்திக்க வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்றுக்காலை பண்டாரவளை மத்திய மகா வித்தியாலயத்தில் புதிய மூன்று மாடிக் கட்டடத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பண்பாடற்ற முறையில் இடம்பெறும் மனிதாபிமான மற்ற பகிடிவதை காரணமாக கடந்த சில வருடங்களாக நாட்டின் பல்கலைக் கழக மாணவர்கள் பல்வேறு விரும்பத்தகாத விடயங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

எதிர்காலத்தில் நாட்டை பொறுப்பேற்கவுள்ள மாணவர் தலைமுறைக்கு ஏற்பட்டுள்ள இந்தச் சவாலுக்கு உடனடியாக தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்த நடவடிக்கைகளின் பின்னால்சில அதிகார மோகம பிடித்த அரசியல் அமைப்புக்கள் செயற்படுவதாகவும் நாட்டின் எதிர்கால தலைமுறையினரின் எதிர்காலத்தை இருளில் தள்ளும் இந்த பயங்கரவாதத்தை ஒழித்துக கட்டுவதற்கு அனைத்து தரப்பினரும் தமது பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கணனி மற்றும் கைத் தொலைபேசியின் மூலம் ஏற்படும் குற்றங்கள் குறித்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி, இந்த விரும்பத்தகாத நிலைமைகள் குறித்து அரசாங்கம் விரிவாக கவனம் செலுத்தியிருப்பதாக தெரிவித்தார்.

பிள்ளைகளின் பரீட்சைப் பெறுபேறுகள் குறித்து மகிழ்ச்சியடைவதைப்போன்று சிறந்ததோர் சமூகத்தில் தொழில்நுட்பத்தை சரியாக பயன்படுத்தும் சமூகப் பொறுப்புக்கள் குறித்து தெளிவுடன் செயற்படும் பரீட்சை போன்று வாழ்க்கையிலும் சித்தி பெறும் எதிர்கால தலைமுறையை நாட்டில் உருவாக்குவதற்கு தமது பொறுப்புக்களை அனைவரும் நிறைவேற்ற வேண்டுமென றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஒலுவில் பல்கலைக்கழகத்தில் பாலியல் லஞ்சம் கொடுக்காமல் மாணவிகள் சித்தியடைய முடியாது

### உயர்கல்வி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ

ஒலுவில் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் பெண் பிள்ளைகள் பாலியல் லஞ்சம் கொடுக்காது போனால் சில பாடங்களுக்கான பரீட்சையில் சித்தியடைய முடியாத ஒரு நிலைமை காணப்படுவதாக உயர் கல்வி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகின்ற போது அமைச்சர் இதனைக் கூறினார்.

ஒலுவில் பல்கலைக் கழகத்திலுள்ள குறிப்பிட்ட ஒரு விரிவுரையாளருக்கு, பாலியல் லஞ்சம் கொடுக்காவிடின் அவரது பாடத்தில் யாரும் சித்தியடைய முடியாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதுதான் இன்று அந்தப் பல்கலைக்கழகத்தின் நிலைமை எனவும் அமைச்சர் மேலும் கூறினார். (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**புருஷார்த்தங்கள் என்பவை எவை? அவற்றை ஏன் கடைப்பிடிக்க வேண்டும்?**

மனிதன் செய்ய வேண்டியதும் கடைப்பிடிக்க வேண்டியதுமான நல்ல செயல்கள் தர்மங்களாகும். செய்யக்கூடாத காரியங்கள் அதர்மங்களாகும். முதலில் தர்மா தாரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். தர்மத்தின் அடிப்படையிலான சந்தோசங்களைப் பெறலாம். தர்மத்தின்படியான ஆசைகளையும் அடையலாம். அந்த சந்தோசங்கள் ஆபத்தானவையல்ல.

சந்தோசங்களைப் பெறவேண்டுமானால் தனம் இருக்கவேண்டும். எனவே தனத்தைப் தேடுதல் அவசியமாகும். தர்மத்தின்படியான அர்த்தத்தைத் தேடலாம். அதாவது தானாக வந்து சேரக்கூடிய வேலையைச் செய்து சம்பாதிக்கும் தனத்தை ஏற்றுக்கொள்ளலாம். சந்தோஷங்களைப் பெறலாம். ஆனால் அதர்மத்தின் வழியில் கிடைக்கும் சந்தோஷம் நமக்கு தீமையையே தரும். அது தர்மத்தை அழித்துவிடும். மோட்சத்தைப் பெறுவதற்குத் தடையாக இருக்கும். *(தொடரும்)*

## மானிப்பாய் பெரியதம்பிரானின் பொங்கல் உற்சவ நிகழ்வு

மானிப்பாய் வடக்கு அருள்மிகு பெரியதம்பிரான் ஆலய வைகாசி மாத பெரும் பொங்கல் திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஏழு நாட்களும் விசேட பூசை, அபிஷேகம் இடம்பெறுவதுடன் அன்னதானமும் இடம்பெறவுள்ளது.

அடுத்து 16.06.2018 சனிக்கிழமை இரவு 7 மணிக்கு சாடியடி கோயிலில் பூசை ஆரம்பமாகி பண்டம் எடுக்கும் நிகழ்வும் வளந்துப்பானை முத்துச் சப்பறத்தில் வீதி உலா இடம்பெறும்.

மறுநாள் (17.06.2018) பெரும் பொங்கல்நடைபெற்று தொடர்ந்து சப்த கன்னிமார்களை அழைக்கும் நிகழ்வும் விசேட பூசைகள், ஊஞ்சல் பாட்டும் கண்ணீறு தெளிக்கும் நிகழ்வும் நடைபெறும்.

மேலும் 23.06.2018 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு எட்டாம்மடை பொங்கல் நிகழ்வும் இடம்பெறும் என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ம)

## நல்லூரில் இன்று கற்பூரத் திருவிழா

(நல்லூர்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசாமி கோயிலில் இன்று கற்பூரத் திருவிழா சிறப்புற இடம்பெறவுள்ளது.

பகல் முருகப்பெருமானுக்கு 1008 (சகஸ்ர) சங்காபிஷேம் நடைபெறவுள்ளதோடு மாலை 4 மணியளவில் சண்முகப் பெருமானுக்கும் அருட்சக்திகளான வள்ளி, தெய்வானைக்கும் திருக்கல்யாண நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ம)

## மனவளக்கலைப் பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக் கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்.அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக் கலைப்பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல. 81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (இ)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 11ஆம் திகதி நடைபெறவிருந்தது.

தவிர்க்க முடியாத காரணத்தால் பிறிதொரு தினத்தில் நடைபெறும் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிர தனியாக ஒரு கடவுள் உலகில் இல்லை.
- மக்களுக்குச் சேவை செய்பவன், உண்மையில் கடவுளுக்கே சேவை செய்தவனாகிறான்.
- தேவையில்லாத விஷயங்களைப் பற்றி அலட்டிக் கொள்வதால் நம் மனசக்தி வீணாகிறது. அமைதி உடன் ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடுங்கள்.
- அச்சத்திற்கு அப்பால் செல்லுங்கள். அச்சமற்றவராக வாழத் தொடங்குங்கள்.
- உண்மை, அன்பு, நேர்மை மூன்றும் ஒருவனுக்கு இருந்துவிட்டால் அவனை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.
- முதலில் நல்ல மனிதனாக வாழப் பழகுங்கள். அதன் பிறகு பொன்,பொருள்,செல்வம் எல்லாம் உங்களைப் பின் தொடர்ந்து வரும்.
- பொறாமை அழிவிற்கு வழிவகுக்கும். துணிச்சல், மனவலிமை, கீழ்ப்படியும் பணிவு இருக்குமிடத்தில் பொறாமை இருப்பதில்லை.

# தூய ஒளி வெற்றிக்கிண்ண அரையிறுதி ஆட்டங்கள்



தூயஒளி வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந் தாடடச் சுற்றுப்போட்டியின் அரையிறுதிக்கு குருநகர் பாடும் மீன், நாவாந்துறை சென். மேரிஸ், இளவாலை யங் ஹென்றிஸ்மற்றும்வேலணை துறையூர் ஐயனார் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

யாழ்.மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன், குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையில், புனித சூசையப்பர் விளையாட்டுக் கழகம், யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையில் நடத்திய கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் காலிறுதியாட்டங்கள் 7 ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

முதலாவது காலிறுதியில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதியது.



போட்டி நேரத்தில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் பெற்றிருக்கவில்லை.

தொடர்ந்து நடைபெற்ற சமநிலை தவிர்ப்பு உதையில் யங்ஹென்றிஸ் அணி, 03:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவது காலிறுதியில் மயிலங்காடு ஞான முருகன் அணியும்வேலணை துறையூர் ஐயனார் அணியும் மோதின. போட்டி நேரத்தில் இரண்டு அணிகளும் தலா 3 கோல்களைப் பெற்றிருந்தன.

வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டது. அதில், வேலணை துறையூர் ஐயனார் அணி, 05:04 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாவது காலிறுதியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது. இதில் சென்.மேரிஸ் அணி, 02:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.



நான்காவது காலிறுதியாட்டத்தில் குருநகர் பாடும் மீன் அணியும் அச்செழு வளர்மதி அணியும் மோதின. இதில் குருநகர் பாடும்மீன் அணி, 03:01 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும்முதலாவது அரையிறுதியில் இளவாலை யங் ஹென்றிஸ்அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் அணியும், தொடர்ந்து நடைபெறும் இரண்டாவது அரையிறுதியில் குருநகர் பாடும் மீன் அணியை எதிர்த்து வேலணை துறையூர் ஐயனார் அணியும் மோதவுள்ளன. (க-106)









மாகாணமட்ட கூடைப்பந்தாட்ட போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியின் 20 வயதுப் பிரிவினர் 2ஆம் இடத்தையும் 17 வயதுப் பிரிவினர் 3ஆம் இடத்தையும் பெற்று தேசியமட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். (க)

# மாவட்ட சதுரங்கப் போட்டி கிளிநொச்சி விவேகானந்தாவுக்கு மூன்று தங்கப் பதக்கங்கள்



கிளிநொச்சி சதுரங்க சம்மேளனத்தால் நடத்தப்பட்ட 2018 ஆம் ஆண்டுக்கான சதுரங்க போட்டியில் கிளிநொச்சி விவேகானந்த வித்தியாலயத்தை சேர்ந்த பு.கலையிசை 12 வயதின் கீழ் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை பெற்று தங்கப் பதக்கத்தையும், பு.நந்துஷா 10 வயதின் கீழ் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை பெற்று தங்கப் பதக்கத்தையும், ஆ. பிரணகா 12 வயதின் கீழ்பெண்கள் பிரிவில் ஒன்பதாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். (க)

# பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி வேம்படி மகளிர் கல்லூரி அணி சம்பியன்




வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்று வருகின்றது. அந்த வகையில் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி யாழ்ப்பாணம் பழைய பூங்கா கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையும் பலப் பரீட்சை நடத்தின.

போட்டியின் ஆரம்ப முதலே அபாரமான ஆட்டத்தை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி அனைத்துச் சுற்றுகளிலுமாக 65:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றதுடன் தேசிய மட்டத்திற்கும் தெரிவாகி சாதனை படைத்துள்ளது. (க)

# வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக் மட்டு - அம்பாறை போட்டி சமநிலையில்

வடக்கு- கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்றின் போட்டியொன்று 4 ஆம் திகதி இரவு நடைபெற்றது.

இதில் அம்பாறை அவேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து மட்டுநகர் சுப்பர் கிங்ஸ் அணி மோதியது.

முதற்பாதியாட்டத்தில் அம்பாறை அவேஞ்சர்ஸ் அணி அடுத்தடுத்து இரண்டு



கோல்களைப் போட்டது.

முதற்பாதியாட்டம் முடியும் தருவாயில் மட்டு நகர் சுப்பர் கிங்ஸ் கோல் ஒன்றைப் போட்டது.

முதற்பாதியாட்டத்தில் அம்பாறை அணி, 2:1 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் மட்டு நகர் சுப்பர் கிங்ஸ் அணி சமநிலை தவிர்ப்பைச் சரியாகப் பயன்படுத்தி கோலை அடித்தது.

முடிவில், இரண்டு அணிகளும் தலா 2 கோல்களையும் பெற்றிருந்தமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (க-26)

## சர்வதேச நீதிமன்றத்தை...

மாரப்பனவுக்கு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். இந்தக் கடிதத்தில் ரோம் உடன்படிக்கையை அங்கீகரிப்பதுடன், சர்வதேச போர்க் குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவிற்கு கடிதமொன்றை எழுதியுள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயீத் ராத் அல் உசைன், சர்வதேச போர் குற்றவியல் நீதிமன்றின் ஒரு தரப்பாக இணைந்து கொள்வதற்குத் தேவையான ரோம் உடன்படிக்கையை தாமதமின்றி ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு இணங்கிய பல பரிந்துரைகள் தொடர்பிலும் வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

இந்தத் துறைகளைஅடையாளம் கண்டு கொள்ளும் போது, 88 நாடுகளினால் முன்மொழியப்பட்ட பரிந்துரைகள் அறிவிப்புக்கள் மற்றும் அரசின் சமர்ப்பிப்புக்கள் மற்றும் பதில்களையும், இரண்டாவது உலக கால ஆய்வு கூட்டத்தில் நடைமுறைப்படுத்துவதாக இணங்கிய 113 பரிந்துரைகள் தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு மனித உரிமைகள் ஆணையாளர் செயீட் ராத் அல் உசைன் வலியுறுத்தியுள்ளார்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள், பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள், மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள், சிறுவர் உரிமைகள், பூர்வீகக் குடிகளின் உரிமைகள், வீட்டுப் பணியாளர்களின் உரிமைகள் உள்ளிட்ட மனித உரிமைகளை பாதுகாக்கும் சர்வதேச உடன்படிக்கைகளுக்கு அமைய சர்வதேச தரத்திலான சட்டங்களை இயற்றிக்கொள்ளுமாறும் அரசை வலியுறுத்தியுள்ளார்.

புதிய அரசியல்யாப்பை தயாரிப்பதற்கு அரசு முன்னெடுத்துள்ள முயற்சிகளை பாராட்டியுள்ளமனித உரிமைகள் ஆணையாளர் அதன்போது கவனம் செலுத்தப்பட வேண்டிய அடிப்படைக் காரணிகள்குறித்தும் கவனம் செலுத்தியுள்ளார்.

அரசியல்யாப்பு மறுசீரமைப்பு நடவடிக்கை யின் போது சம உரிமை இனப்பாகுபாடு அற்ற நிலை, அதிகாரப்பரவலாக்கல், நீதிமன்ற சுயாதீனத் தன்மை ஆகிய அடிப்படை சித்தாந்தங்கள்கருத்தில்கொள்ளப்பட வேண்டும் என்று அல்உசைன் வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமைகள் ஆணையகங்களுக்கான சர்வதேச அமைப்பினால் ஏ தரத்திற்கு முன்னிலைப்படுத்தப்பட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின்சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்துமாறும் இலங்கை அரசிடம் ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார். இதன்போது சர்வதேச தரத்திற்கு ஏற்ப ஆணைக்குழுவிற்கு தேவையான ஆளணி, தொழில்நுட்பம் மற்றும் ஏனைய வளங்களையும் தடையின்றி பெற்றுக்கொடுக்க வேண்டியது அவசியம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். (ம)

## மே-18 நினைவேந்தலை...

இதுதொடர்பில் மாகாண முதலமைச்சர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை ஆண்டுதோறும் மே மாதம் 18ஆம் திகதி நடத்துவதற்கு நினைவேந்தல் நாளாக அந்தத் தினத்தை பிரகடனப்படுத்தியிருந்தோம்.

அதற்காக இந்த ஆண்டு வழிநடத்தல் குழுவொன்றை அமைத்திருந்தோம். இனி வருங்காலங்களில் சில வேளை வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படாமையால் எம்மவர் ஆட்சியில் இல்லாதிருக்க வேண்டிவரினும் அல்லது ஆளுநரின் ஆட்சியில் எதிர்வரும் காலங்களில் இருக்கவேண்டிவரினும்கூட இந்த நிகழ்வை தொடர்ந்து வருடந்தோறும் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய உத்தேசித்துள்ளோம்.

அதற்கான குழுவை இப்போதே நியமிக்கத் தீர்மானித்துள்ளோம். இந்த நிகழ்வு தொடர்ச்சியாக வருடந்தோறும் பரந்துபட்ட விதத்தில் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதில் உறுதியாகவுள்ள ஆர்வமுள்ள பொது நிறுவனங்களை இந்தக் குழுவில் நிறுவனத்துக்கு இருவர் என்ற ரீதியில் இணைத்துக் கொண்டு ஒரு குழுவை உருவாக்க எண்ணியுள்ளோம்.

மேலதிகமாக வேண்டுமெனில் தேவையான சில நபர்களையும் உள்ளடக்க உத்தேசித்துள்ளோம்.

இந்தக் குழுவானது 2019ஆம் ஆண்டிலிருந்து சுயமாக இயங்கக் கூடியதாக இருக்கும். இவ்வாறு அமையவிருக்கும் குழுவில் உறுப்பினராக இணைந்து கொள்ள விரும்பும் பொது அமைப்புக்கள் மற்றும் பொது நிறுவனங்கள் மற்றும் தகைமை சார்ந்த பொதுமக்கள் அவ்வாறு சேர்த்துக் கொள்ளக்கூடிய பெயர்களை தத்தமது கடிதத் தலைப்புக்களில் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகோள் ஒன்றை இதன் மூலம் விடுக்கின்றேன்.

அனுப்ப வேண்டிய முகவரி,
முதலமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர்,
முதலமைச்சர் அலுவலகம்,
வடமாகாணம், கைதடி

குழு அங்கத்தவர் நியமனமானது உரியவாறு வெளிப்படையாக காலாகாலத்தில் நடைபெறும் என்றுள்ளது. (ம)

## இலங்கை முன்னேற்றம்...

முன்னேறி 67ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளது.

உலகளாவிய அமைதிக் குறியீட்டின் பன்னிரண்டாவது பதிப்பில் உலகின் எவ்வளவு நாடுகள் குறைவான அமைதியை பெற்றுள்ளது என்பதை இந்த ஆய்வு தெளிவுப்படுத்தி உள்ளது.

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் செயல்படும் பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான நிறுவனம் நடத்திய ஆய்வில், அமைதிப் போக்கு, அதன் பொருளாதார மதிப்பு மற்றும் அமைதியான சமுதாயத்தை எவ்வாறு விரிவாக்கம் செய்வது ஆகியவற்றின் மீதான மிக விரிவான தரவு சார்ந்த பகுப்பாய்வை இந்த அறிக்கை அளிக்கிறது.

இந்த அறிக்கையின் படி, உலகின் அமைதியான நாடுகள் பட்டியலில், 72ஆவது இடத்தில் இருந்த இலங்கை 67ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

உலகின் அமைதியான நாடுகள் பட்டியலில் 2008ஆம் ஆண்டில் இருந்தே ஐஸ்லாந்து முதலிடத்தில் உள்ளது. நியூசிலாந்து, ஆஸ்திரியா, போர்ச்சுகல் மற்றும் டென்மார்க் ஆகியவை அடுத்தடுத்த ஐந்து இடங்களை பிடித்துள்ளன. (ம)

## ஜனாதிபதி உதைத்து...

எட்டி உதைந்து விட்டார் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று தேசிய பாதுகாப்பு நிதியம் (திருத்த) சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிந்து ஒன்பது ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. ஆனால் இன்னும் வடக்கில் அபிவிருத்திகள் எவையும் இடம் பெறவில்லை. மாறாக இராணுவ குவிப்பு மட்டுமே இடம்பெற்று வருகின்றது.

இலங்கையில் ஏனைய மாகாணங்களில் இல்லாத அளவில் இன்று வடக்கில் இராணுவம் குவிக்கப்படுகின்றது. இராணுவத்தின் மூலமாக சகல நடவடிக்கைகளையும் செய்து வருகின்றனர். ஆனால் இன்று ஒரு மாயையை உருவாக்கி வடக்கில் அபிவிருத்தி என்ற பெயரில் மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

சிங்கள மக்கள் இராணுவ உதவியுடன் வடக்கை ஆக்கிரமித்து வருகின்றனர். அதற்காகத்தான் இன்று வடக்கிற்கு நிதி ஒதுக்கப்படுகின்றதா? இவற்றின் மத்தியில் வடக்கின் மக்கள் இன்று வேதனையில் உள்ளனர். பாரம்பரிய தொழிலில் ஈடுபடும் மக்கள் பாரிய நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் நாம் மக்களின் ஆணைக்கு அமைய தீர்மானம் எடுத்தோம். எம்மை பொறுத்தவரையில் மைத்திரிபால சிறிசேனவும் எமக்கு எதிரி, மகிந்த ராஜபக்ஷவும் எதிரி. ஆகவே அவர்களில் எந்த எதிரியை ஆதரிக்க வேண்டும் என மக்களிடம் கேட்டபோது அதற்கு மக்களின் ஆணை வழங்கப்பட்டது.

ஆனால் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முகத்தில் எட்டி உதைத்துவிட்டார். ஏற்றிவைக்க உதவிய ஏணியையும் உதறித் தள்ளி விட்டார். இந்த நாட்டின் ஜனாதிபதி தொடக்கம் அரசியல்வாதிகள் அனைவரும் தமிழ் மக்களின் இனப் பிரச்சினையை தீர்க்க எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

ஆகவே எமது பிரச்சினைகள் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு சென்று சர்வதேச தலையீடுகளுடன் தீர்வுகளை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ம)

## எதிர்காலச் சந்ததிக்கு...

மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாவை கலட்டி கிராம அபிவிருத்திச்சங்க பொது மண்டபத் திறப்பு விழா நேற்று தெல்லிப்பழையில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது ஒவ்வொரு அசைவுகளும் நடவடிக்கைகளும் அரசினால் உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வருகின்றது. எமது நிலங்கள் சுவீகரிக்கப்படுவதற்கும் எமது பகுதிகளில் காணப்படுகின்ற இயற்கை வளங்கள் சுரண்டிச் செல்லப்படுவதற்கும் வெளியாரின் உள்ளீடுகள் இருப்பதை அவதானிக்கின்றோம்.

எமது பகுதிகளில் தமது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் ஒரு பகுதியினர் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். எனவே உங்கள் பகுதிகளில் காணப்படும் நில புலன்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் உற்பத்திக்கு பயன்படுவனவாக மாற்றப்பட வேண்டும்.

இந்த மண்ணுக்கும் எதிர்கால சந்ததிக்கும் நாம் விட்டுச் செல்லக் கூடியவை எப்படியாக அமைய வேண்டும் என்பதில் கரிசனை காட்டுங்கள். மண்ணை செயற்கை இரசாயன பாதிப்புக்குள்ளாக்காமல் இயற்கை உரங்களைப் பாவித்து வளம் பெறச் செய்யுங்கள். இதனால் எமது எதிர்காலச் சந்ததியினர் சீரும் சிறப்புடன் தேக சுகத்துடன் வாழ வழி சமைப்போம். அவ்வாறு செய்து இந்த பூகோளத்தைக் காப்பதற்கும் அழிவுப் பாதையில் இருந்து தடுப்பதற்கும் முயலுவோம் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## நல்லிணக்கத்தை...

சகல இனங்களுக்கிடையிலான பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கை மூலமாக நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது மக்களினதும் அரசாங்கத்தினதும் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்லாமியர்களின் விசேட இப்தார் நிகழ்வு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி இப்தார் நிகழ்வு இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் விசேட நிகழ்வாகும் எனத் தெரிவித்தார். (ம)

## இனங்களுக்கு இடை...

நடைமுறைப்படுத்தியமை போன்ற இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு இதன்போது வரவேற்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஊடக சுதந்திரம் உட்பட்ட இனங்களுக்கு இடையிலான அமைதி, சகிப்புத் தன்மை என்ற விடயங்களில் கவனம் தேவை என்பதை ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது (ம)

## திக்கம் வடிசாலையை...

ஒன்று நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வடமராட்சி திக்கம் வடிசாலை பல வருடங்களுக்கு மேலாக இயங்காது காணப்படுகிறது. குறித்த வடிசாலையை சர்வதேச தரத்தில் நவீன ரகமாக மீள் புனரமைப்பு செய்வதற்கு பனை அபிவிருத்திச்சபை தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது.

குறித்த வடிசாலை புதிதாக மீள் இயக்குவதற்கு இரண்டு வருட கால ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் முதல் ஒரு வருடத்தில் கட்டட நிர்மாணம் மற்றும் உபகரணங்கள் பொருத்துதல் போன்ற செயற்பாடுகளும் இரண்டாம் வருடம் சர்வதேச தரத்தில் சாராய உற்பத்தியை மேற்கொள்வதுமான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் இயற்கையான பானத்தை விற்பனை செய்வதற்குமாக இந்த திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

நேற்றைய நிகழ்வில் பனை அபிவிருத்தி சபை தலைவர் உட்பட முகாமையாளர்கள், அதிகாரிகள், கூட்டுறவு துறை அதிகாரிகள், வடமராட்சி பனை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், திட்டத்தின் ஆலோசனை முகாமையாளர் உட்பட பலர்கலந்து கொண்டனர். (ம-9)

## இறுதி சடங்கு...

விட்டதாகத் தெரிவித்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட இரண்டரை வயதுப் பெண் குழந்தை உயிருடனிருப்பதாக நம்பப்பட்டு இறுதிச் சடங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் யாழ்.சங்குவேலி கட்டுக்குளப் பிள்ளையார் கோவிலடியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த குழந்தைக்கு ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக கடந்த மாதம்-15 ஆம் திகதி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டு நான்கு நாட்களாக அங்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

பின்னர் காய்ச்சல் குறையாத காரணத்தால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை வழங்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த குழந்தை மூளைக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்து விட்டதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டு கடந்த புதன்கிழமை இரவு பெற்றோர்களிடம் குழந்தையின் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சங்குவேலியிலுள்ள குழந்தையின் வீட்டில் குழந்தைக்கு இறுதிக்கிரியைகள் நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் நண்பகல்-12 மணியளவில் உயிரிழந்த குழந்தையின் சடலத்திலிருந்து திடீரென மலம், சிறுநீர் என்பன வெளியேறியுள்ளன. அத்துடன் குறித்த குழந்தையின் உடலில் இறந்த பின்னர் ஏற்படுவது போன்று எவ்வித மாற்றமுமின்றிக் காணப்பட்டமை அங்கு நின்ற பலருக்கும சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் அப்பகுதியில் ஒருவித பரபரப்பையும் ஏற்படுத்தியிருந்தது.

இதனையடுத்துக் குழந்தை உயிருடனிருப்பதாகக் கருதப்பட்டு உரும்பிராயிலுள்ள விநாயகர் ஆலயமொன்றிற்கும், உடுவில் பகுதியிலுள்ள தேவாலயமொன்றுக்கும் எடுத்துச் சென்ற உறவினர்கள் அங்கு பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளனர்.

அதன் பின்னர் குறித்த குழந்தை இறக்கவில்லை என சிலரால் தெரிவிக்கப்பட்டமையால் குழந்தையின் இறுதிக் கிரியை ஏற்பாடுகள் யாவும் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் நேற்று காலை குறித்த குழந்தை இறந்துவிட்டதாகத் தெரிவித்து மீண்டும் இறுதிக்கிரியை ஏற்பாடுகள் இடம் பெற்றுக் கொண்டிருந்தது.

இந் நிலையில் குழந்தையின் உறவினரான இளம்பெண் ஒருவர் குழந்தையின் கையைத் தொட்டுப்பார்த்துவிட்டு கையில் சூடு இருப்பதாக தெரிவித்தமையால் மரணச் சடங்குக்கு வந்தவர்கள் மத்தியில் மீண்டும் பரபரப்பு தொற்றிக் கொண்டது.

அவர் இவ்வாறு கூறிய சில நிமிடங்களில் குழந்தையின் கையில் நாடித் துடிப்புக் காணப்படுவதாகக் குழந்தையின் தந்தையார கூறியமையால் பரபரப்பு மேலும் அதிகரித்தது.

இந்நிலையில் இறுதிக்கிரியை ஏற்பாடுகள் யாவும் நிறுத்தப்பட்டு மரணச் சடங்கிற்கு வந்தவர்கள் மத்தியிலிருந்து குழந்தை தனியாகத் தூக்கிச் செல்லப்பட்டு அருகிலிருந்த வீட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது. இதன் போது குறித்த குழந்தையின் உடலில் அடிக்கடி நாடித் துடிப்பு உணரப்பட்டதாக குழந்தையின் உறவினர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த குழந்தையின் உடலிலிருந்து சிறுநீர் வெளியேறியுள்ளது.

குழந்தை உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்து மூன்றுநாட்கள் ஆகின்ற போதிலும் உடலியல் ரீதியாக இறந்தவர்களுக்கு ஏற்படும் மாற்றங்கள் எதுவும் குழந்தையின் உடலில் ஏற்படவில்லை.

இதனால்.குழந்தை உயிருடன் இருப்பதாக அவரது பெற்றோர் மற்றும் உறவினர்கள் முழுமையாக நம்பத் தொடங்கியுள்ளனர். இதனையடுத்துக் குழந்தை உயிருடன் மீண்டு வருவாள் என்ற மாறாத நம்பிக்கையில் குழந்தையின் உறவினர்கள் மற்றும் அயலவர்கள் இடைவிடாது வழிபாடுகள் மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

## ஈழத்தமிழர்களு...

செயலாளர் சட்டத்தரணி த.பார்வேந்தன் வழங்கவுள் ளார். மேலும் நீதிபதி கே.பி.சிவசுப்ரமணி யம், நீதிபதி ஜி.எம்.அக்பர்அலி, நீதிபதி ஏ.கே.ராஜன் ஆகியோரும் உரையாற்றவு ள்ளனர்.

இந்த நிகழ்வின் சிறப்பு அழைப்பாளர்க ளாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக பொதுச்செயலாளர் சட்டத்தரணி வைகோ, விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் சட்டத்த ரணி கே.சுகாஷ் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். இந்த மாநாட்டை ஈழத்தமிழர் ஆதரவு வழக்கறிஞர்கள் கூட்டமைப்பும், அனைத்துலக ஈழத்தமிழர் உரிமை மையமும் இணைந்து நடத்துகின்றன.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதன் பின்னர் ஈழத் தமிழர் தொடர்பிலான மாநாடுகள் நீதிபதிகள் மட்டத்தில் நடைபெறுவது இந்தியாவில் முடியாத ஒன்றாகவே இருந்து வந்தது. இந்த நிலையில் பல தசாப்தங்களின் பின்னர் ஈழத் தமிழ் மக்களுக்கு நீதி வேண்டி இந்த மாநாடு பல நீதிபதிகளின் பங்கேற்புடன் ஆரம்பகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின் பேச்சாளர்கள் ஈழ தமிழர்கள் எதிர்நோக்கி வரும், அல்லது கடந்த காலங்களில் அனுபவித்த இழப்புக்கள், வலிகளுக்கு, அழிவுகளுக்கு எவ்வாறு நீதியை பெற்றுக்கொள்ள முடியும்? அதற்காக தமிழர்கள் அனைவரும் என்ன செய்ய வேண்டும்? என்பது குறித்து பேசவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-4)

## தவறிக் கீழே விழு...

இடம்பெற்றது.



தாமரைக் கோபுரத்தின் மின் உயர்த்தி நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்தபோதே 13ஆவது மாடியிலிருந்து தவறி வீழ்ந்து இளைஞன் உயிரிழந்தார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த கோடீஸ்வரன் நிதர்சன் (வயது -19) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார். (ம)

## மண்ணெண்ணெ...

இந்த நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

அதன்படி நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் விலை 25 தொடக்கம் 30 ரூபாயினால் குறைவடையக்கூடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்பை தொடர்ந்து நாட்டில் பல்வேறு இடங்களில் மீனவர்கள் போராட்டம் நடத்திவந்த நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ம)

## மானிப்பாயில்...

தப்பித்துள்ளது என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றது.

இரண்டு மோட்டார் சைக்கிளில் 6 பேர் கொண்ட கும்பல் வந்தது. வீட்டின் வாசல் படலையை கூரிய ஆயுதங்களால் தாக்கி சேதப்படுத்தியது.

வீட்டு முற்றத்தில் தரித்து நின்ற முச்சக்கர வண்டியை அடித்து சேதப்படுத்திய கும்பல், வீட்டின் யன்னல்கள் கண்ணாடிகளையும் கூரிய ஆயுதங்களால் தாக்கிவிட்டு தப்பித்தது என்று வீட்டின் உரிமையாளரால் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அந்தக் குடும்பத்தை அச்சுறுத்தும் வகையிலேயே வாள்வெட்டுக் கும்பல் ஒன்று இவ்வாறு அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ளது. சந்தேக நபர்கள் விரைவில் கைது செய்யப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம)


ஹொட்டேல்துறை அனுபவமுள்ளவர்களுக்கு

PR ஏற்பாட்டுடன் கனடா விசா

26 ஐரோப்பிய நாடுகளுக்கான செங்கன் விசா

அமெரிக்க Mc Donalds, Marriot, Sheraton உட்பட முன்னணி நட்சத்திரதர ஹொட்டேல்களுக்கான

டுபாய், குவைத், ஓமான், பாஃரேன், கட்டார் விசாவுடன்

உடனடி வேலைவாய்ப்பு



Supervisor
Restaurant Manager
Host
Waiters
Housekeeping
Sous Chef
Commis
Barista
Service Helper
Kitchen Helper
Dish Washer

(வீ-2849)

நட்சத்திரதரஹொட்டேல் அல்லது உயர்தர உணவகங்களில் பணியாற்றிய அனுபவம், ஆங்கில தொடர்பாடல்திறன் அவசியம்

அனுபவம் இல்லாதவர்களுக்கு விசேட ஹொட்டேல் பயிற்சி & ஆங்கில தொடர்பாடல் பயிற்சியுடன் 4 மாதங்கள்

வேலைவாய்ப்பு, விசா ஏற்பாடு

O/L or A/L எடுத்த மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்

0777 324 004
077 36 16 798
021 221 9 221

9வது ஆண்டில் · 9th Year
SIKARAM ACADEMY
Business · Hospitality · Media
FAST TRACK to CAREERS
Sri Lankan Enterpreneur of the Year 2017

221 - 1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்
www.sikaram.lk facebook.com/www.sikaram.lk



நாய்க்குட்டி, வான்கோழி விற்பனைக்கு

இரண்டு மாதம் நிரம்பிய தடுப்பூசி ஏற்றப்பட்ட ஆண் டாசோண் நாய்க்குட்டி, முட்டையிடும் வான்கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 077 297 6255
(4438)



மணமகள் தேவை

1978 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
வரதட்சனை எதிர்பார்க்கப்படமாட்டாது.
நட்சத்திரம் - பூராடம்
தனியார் தொழில் (கடை)
076 919 8259
021 223 1460
(4437)



வேலை வாய்ப்பு

சர்வதேச நிறுவனத்தில் பணிபுரியும் வாய்ப்பு. O/L, A/L படித்த ஆண், பெண் இருபாலாருக்கும் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய இரு மாவட்டத்திலும் உடனடி வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

- பணியாளர்கள்
- நிதி முகாமையாளர்கள்
- உதவி முகாமையாளர்கள்
- மேற்பார்வையாளர்கள்
- அலுவலகர்கள்

(6 மாத கால பயிற்சியுடன்)

☑ குறுகிய கால பதவி உயர்வு வழங்கப்படும்.
☑ தங்குமிட வசதிகள் உண்டு.
☑ 18-30 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு
☑ பயிற்சிக்காலத்தில் 18500/= - 25000/= வரையிலும் பயிற்சியின் பின்னர் 45000/= மேல் பதவிக்கு ஏற்ப வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 077 999 4807, 077 802 1371
(4439)



Win repair

சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும், A/C களும் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு:- 0779648942



வேலை ஆட்கள் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள அலுவலகத்துக்கு வீடியோ எடிட்டிங் தெரிந்த ஆட்கள் உடனடியாகத் தேவை.
தொடர்பு: 0773322527
(4440)



வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அன்னா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் -மீசாலை-கிளிநொச்சி-கனகராயன்குளம்
முல்லைத்தீவு-மன்னார்-வவுனியா-திருகோணமலை
(C-2811)



இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம், குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500
(4038)



விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
●மானிப்பாய் ●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-2755)



கிளிநொச்சியில் வேலை வாய்ப்பு

எமது கிளிநொச்சி கிளைக்கு அலுவலக நிர்வாகிகள் தேவைப்படுகின்றார்கள்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
வயது :-18-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15000/-
V2 TRAVELS
A9 வீதி, கிளிநொச்சி 0768226241
v2vacancies@gmail.com
(C-2832)



தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை

ஆரம்பம் 25.06.2018 யாத்திரீகர் 15 நாள்கள் 16

தரிசிக்கும் இடங்கள்:- மலைக்கோட்டை விநாயகர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோவில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காள கஸ்திரி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவானைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷானம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழ பகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், கோடி, லிங்கேஸ்வரர், மைசூர் சாமூண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாக்குமரி, சுசீந்திரம், மனக்குழ விநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சமாதிகளையும் மைசூர் பாலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை:- இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், இரண்டு பேருக்கு கட்டில் மெத்தை, குளியல் அறை இணைந்த அறைகள், A/C வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர் போட் போகவும் வரவும் வாகனவசதி இவை அனைத்தும் எமது சேவை.

மேலும் விபரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும் சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்கலாம். (இத்துடன் யாழ்-கொழும்பு, யாழ் போக வர வாகனவசதி செய்து தரப்படும்)

தொடர்புகளுக்கு : கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார்தெரு,
கொழும்பு -11
T.P 077 768 0102, 077 736 2154
(வீ-2852)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



சின்னத்துரை சிவகாந்தன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 33வது பொதுப் பட்டமளிப்பு விழா 08.06.2018 அன்று கல்வியியல் முதுமாணிப் (MEd) பட்டத்தை பெற்ற சின்னத்துரை சிவகாந்தன் அவர்கள் மேலும் பல பட்டங்களைப் பெற்று வாழ்வில் வெற்றி பெற வாழ்த்தி மகிழ்கின்றோம்.

-வாழ்த்துவோர்கள்-
சாவகச்சேரி நண்பர்களும், உறவினர்களும்.
(வீ-2859)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.06.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.